# களப்பிரர்

ஆசிரியர்
நடன. காசிநாதன் எம். ஏ
பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெளியிட்டோர்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
*1981.*

முதற் பதிப்பு. 1981
த. நா. தொ. ஆய்வுத்துறை வெளியீடு எண். 76

© த. நா. தொ. ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நூலகம்
நூல் சேர்க்கை
எண்
சென்னை - 600 008

# களப்பிரர்

ஆசிரியர்
நடன. காசிநாதன் எம்.ஏ.

விலை. ரூ. 3-75

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால்
துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

# முன்னுரை

களப்பிரர் பற்றி திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் முதல் பல வரலாற்றாசிரியர்கள் சிறு குறிப்பு அளவில் தங்கள் கருத்துக் களை வெளியிட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் திரு. இரா. பன்னீர்செல்வம், 'தமிழ்நாடும் களப்பிரர் ஆட்சியும்', என்றும், திரு. மயிலை சீனி வேங்கடசாமி, 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்றும், திரு. மு. அருணாசலம் 'பாண்டி நாட்டில் களப்பிரர்' என்றும் நூல்கள் எழுதியுள்ளனர். கி.பி. 3-ம் நூற்றாண்டு முதல் கி பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலான களப்பிரர் பற்றிய முழு வரலாறு இந்நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

களப்பிரர்கள் யாவர் என்பது கல்வெட்டு ஆதாரங்களுடன் ஆராயப்பட்டுள்ளது. கள்வர், களப்பிரர், களப்பாளர் ஆகிய மூன்று சொற்களுமே களப்பிரர் குலத்தைக் குறிக்கிறது எனில் தவறில்லை.

களப்பிரர் பற்றிய ஒரு புதிய நோக்கை இந்நூலில் அளிக்க முயன்றுள்ளேன். இது மேலும் பல ஆராய்ச்சிக்கு உதவும் என எண்ணுகிறேன்.

அன்பன்

**நடன. காசிநாதன்**

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| களப்பிரர் வருகை | 1 |
| பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் களப்பிரர் | 45 |
| களப்பிரர் சமயம் | 53 |
| களப்பிரர் காசு | 57 |
| களப்பிரர் பற்றிய வாழ்த்துப் பாக்கள் | 59 |
| கொங்கு நாட்டுத் தனிப்பாடல் | 66 |

# களப்பிரர்

# களப்பிரர் வருகை

தமிழக வரலாற்றைக் கற்காலம் தொட்டு தற்காலம் வரை வரலாற்றாசிரியர்கள் எழுதி வருகின்றனர் என்றாலும் சங்க காலத்தை அடுத்து மூன்று நூற்றாண்டு காலத்தில் தமிழகத்தின் நிலை என்ன என்பதைச் சரிவரக் கூறமுடியாத நிலையிலேயே உள்ளனர். அக்கால கட்டத்து வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் குறிப்பிட்ட அளவில் கிடைக்காத காரணத்தால் அதனை 'இருண்டகாலம்' என்று கூறுகின்றனர். அக்கால கட்டத்தில் 'களப்பிரர்கள்' என்னும் அரச பரம்பரையினர் ஆண்டிருக்கக்கூடும் என்பதை வேள்விக்குடிச் செப்பேடுகள் குறிப்பால் உணர்த்து வதால் 'களப்பிரர் காலம்' என்றும் கூறுவர். பொதுவாகக் களப்பிரர்கள் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை ஆண்டனர் என்பர். அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சில கல்வெட்டுக்களால் அவர்கள் கி. பி.9ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழகத்தில் சிறுபகுதியையேனும் ஆண்டிருக்கக்கூடும் என்பது தெரியவருகிறது. அதற்குப் பிற்பட்ட காலத்தில் அவர்கள் ஓரளவுக்குத் தம் நிலை தாழ்ந்து சோழ, பாண்டிய மன்னர்களிடத்தில் அரசு அதிகாரி களாகப் பணிபுரிந்து வந்திருக்கின்றனர் என்பதற்கும் போதிய சான்றுகள் கிடைத்துள்ளன.

## சங்ககாலத்தில் களப்பிரர்

சங்ககாலத்தில் கள்வர் கோமான் **புல்லியைப்** பற்றிய செய்தி காணப்படுகிறது. அவன் வேங்கட மலைக்குத் தலைவன் என்றும் தமிழ்ப் புலவர்களுக்கு வரையாது வழங்கிய வள்ளல் என்றும் புகழப்படுகிறான். அவ்வேங்கடமலை மொழி பெயர் தேயத்தைச் சேர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

"புடையலங் கழற்காற் **புல்லி** குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கு
மொழிபெயர் தேயம்" (அகம். 295.)

என்ற அகப்பாட்டால் மேற்கூறப்பெற்ற உண்மைகள் புலனாகின்றன. அப்புல்லியானவன் மழநாட்டை வென்றவன் என்பதை மற்றொரு அகப்பாடல் கீழ்க்காணுமாறு எடுத்துரைக்கின்றது.

"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்." (அகம். 61.)

மழநாடு என்பது தற்காலத்திய தர்மபுரி, சேலம் மாவட்டங்கள் அடங்கிய பகுதியாகும். இப்பகுதி புல்லியின் நாட்டுக்கு அண்மையிலிருந்த காரணத்தினால் அவன் வென்றிருக்கிறான். இதனையும் தன்னாட்சியின் கீழ் கொண்டு வந்திருக்கிறான். மழநாட்டை அதியர்கள் ஆண்டு வந்திருக்கின்றனர். சங்க காலத்தில் அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அதியர் மன்னன் தகடூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்திருக்கிறான். அவன் வழியில் வந்த ஒருவனை வென்று புல்லி இப்பகுதியைக் கைப்பற்றியிருக்கக்கூடும். ஆதலால்தான் அவன் மழநாடு வென்றமை பற்றி புகழ்ந்து பேசப்படுகிறது.

மொழி பெயர் தேயத்தவனாக இருந்தாலும் தமிழறிந்தவனாகவே அவன் இருந்திருத்தல் வேண்டும். காரணம் அவன் தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் ஆதரித்திருக்கிறான்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு
நல்லுலகம்'

என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தின்படி வேங்கடம் தமிழ்நாட்டின் வட எல்லையாக விளங்கியிருக்கிறது. எனவே வேங்கடத்தின் தென்பகுதி தமிழ்நாடாகவும்,

வேங்கடத்தின் வடபகுதி மாற்றுமொழிபேசும் நிலமாகவும் இருந்திருக்கும். தமிழ்மொழி பேசுவோரும் வேற்று மொழி பேசுவோரும் கலந்து உறைகின்ற நாடாகப் புல்லியின் நாடு இருந்திருக்கும். ஆதலால்தான் தமிழ்ப் புலவர்கள் அந்நாட்டை மொழிபெயர்தேயம் என்று கூறிப் போந்தனர்.

> "………வடுகர்
> பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
> மொழிபெயர் தேஎயம்"

என்று கூறுவதிலிருந்து வடுகர்கள் வாழும் இடம் மொழிபெயர்தேயம் என்பதை உணரலாம். அம்மொழி பெயர்தேயத்தில் கலி சிறந்து எக்காளமிடுகிறது என்று கூறுகிறார் கவிஞர். கலி என்பது இங்கு கலி குலத்தைக் குறிப்பதாகலாம். அங்கு கலி அரசனாகிய கள்வர் கோமான் புல்லி ஆள்வதையே புலவர் அவ்வாறு குறிப்பாலுணர்த்து கிறார். ஆதலால் புல்லி, வடுகர் நாட்டில் உள்ள கள்வர் குலத்தைச் சேர்ந்தவன் என்பதையும்; அவன் தமிழ்ப் புலவர் களைப் புரக்கும் அளவுக்குத் தமிழறிவு மிக்கவன் என்பதையும் நாம் எளிதில் உணரலாம்.

## தமிழகத்தில் களப்பிரர் வருகை

முடியுடை மூவேந்தர்களின் ஆட்சி ஒரு முடிவுக்கு வந்ததும் குறுநில மன்னர்கள் செல்வாக்குப் பெறலாயினர். அந்தச் சூழ் நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு வேங்கடமலைப் பகுதியிலிருந்து சிறுகச் சிறுகத் தெற்கு நோக்கி நுழைய ஆரம்பித்தனர் **களப்பிரரின் ஒருபிரிவினர்.** அதன் முதல்கட்டம்தான் மழபுலத்தை வென்றதாகும். மழநாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியதும் சோழநாடு, பாண்டி நாடு, கொங்குநாடு என்று அவர்கள் தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். தொண்டை நாட்டுப் பகுதியில் அவர்களது நுழைவு ஆரம்பக் கட்டத்தில் ஏற்படவில்லை. காரணம் அச்சமயம் பல்லவர்கள் வலிவு பெற்றிருந்ததாலேயே யாகும்.

## களப்பிரரின் ஆதி இருப்பிடம்

கி. மு. நான்காம் நூற்றாண்டளவில் கருநாடக மாநிலத்தில் தற்போதுள்ள சிரவணபௌகொள என்று வழங்கப்படும் பகுதி **'கள்பப்புநாடு'** என்று அழைக்கப்பட்டுள்ளது.[1] மௌரிய மன்னன் அசோகப் பேரரசனின் பாட்டனாரான சந்திரகுப்த மௌரியர் தம் அரசைத் துறந்து சமணசமயத்தை ஏற்றுத் துறவு பூண்டு அக் **களபப்பு** நாட்டில் உள்ள களபப்பு மலையில் வந்து தங்கினார் என்று சமண சமய நூலான 'வட்டாரதனே' என்னும் நூல் கூறுகிறது.[2] தற்போதுள்ள சந்திரகிரி மலைக்குப் பழைய பெயர் **களபப்புபெட்ட** என்பதாகும்.[3] ஆதலால் சிரவணபௌகொள பகுதியே களப்பிரர்களின் ஆதி இருப்பிடமாகும். நாளடைவில் அவர்கள் கோலாரிலுள்ள நந்திமலை, தமிழகத்தின் வடபகுதியான வேங்கடமலை ஆகிய பகுதிகளுக்குக் குடியேறி சிறுசிறு பகுதிகளுக்குத் தலைவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர்.

கி. பி. 3-ஆம் நூற்றாண்டளவில் வேங்கடமலையை ஆட்சி செய்ததாகப் புல்லி குறிக்கப்படுகிறான். கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் கதம்ப அரசனான காகுத்தன் களப்பிரருக்குப் பகைவன் என்று பேலூர் தாலுக்காவைச் சேர்ந்த ஹல்மிடி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு கூறுகிறது.[4] அதே காலத்தில் தமிழகத்தில் சோழ நாட்டில் அச்சுதவிக்ராந்தன் என்னும் களப்பிர மன்னன் ஆண்டு வந்ததாகப் புத்தமத நூல் ஒன்றினால் புலனாகிறது.

## அச்சுதவிக்கந்தன்

கி. பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த ஆசாரிய புத்ததத்ததேரர் சோழநாட்டைச் சேர்ந்தவர். பௌத்தத் துறவிகளில் அவர் மிகவும் புகழ் பெற்றவர். அவர் பாலி மொழியில் புத்தவம்சாத்த கதா, அபிதம்மாவதாரம்,

1. டாக்டர். எம். சிதானந்த மூர்த்தி, கன்னட ஸாஸனகள ஸம்ஸ்கிருதிக அத்யயன கி. பி. 450 - 1150 (1966), பக்கம் 70, 78.
2. வட்டாரதனெ, பத்ரபாஹு பட்டாரா கதெ.
3. டாக்டர். எம். வி. கிருஷ்ணராவ், எம். கேசவபட்ட, கர்நாடக இதிகாஸ தர்ஸன. (1970), பக்கம் 13, 14.
4. Mysore Archaeological Report 1936, No. 16.

வினய வினிச்சியம், உத்தரவினிச்சியம் ரூபாரூபானிபாகம், ஜினாலங்காரம் முதலான நூல்களை எழுதியுள்ளார். இவர் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், பூதமங்கலம், காஞ்சிபுரம் முதலான ஊர்களில் இருந்த பௌத்த விஹாரங்களில் தங்கி யிருந்திருக்கிறார். சோழநாட்டைச் சேர்ந்த பூதமங்கலம் என்னும் ஊரில் வேணுதாசர் எடுப்பித்த பௌத்த விஹாரத்தில் இவர் தங்கியிருந்தபோது வினயவினிச்சயம் என்ற நூலை களப்பகுல மன்னர் அச்சுத விக்கந்தன் என்பான் ஆட்சியில் இயற்றியதாக அவரே எழுதியுள்ளார்.[5]

பஸாத ஜனனே ரம்மே பாஸாதே வஸதா மயா
புத்தஸ்ஸ புத்தஸீஹேன வினயஸ்ஸ வனிச்சயோ
புத்த ஸீஹம் ஸமுத்திஸ்ஸ மம ஸத்தி விஹாரிம்
கதோ யம் பன பிக்கூனம் ஹிதத்தாய ஸமாஸதோ
வியைஸ்ஸாவ பொத்தந்தம் ஸங்கேனே வாசிரேன ச
அச்சுதச்சுத விக்கந்தே களப்பகுல நந்தனே
மஹிம் ஸமனு ஸாஸந்தே ஆரத்தோ சஸமாபிதோ

என்பது அப்பகுதியாகும். இப் புத்ததத்ததேரர் இலங்கை மன்னன் சிறிகுட்டன் (கி. பி, 409-430) காலத்தில் வாழ்ந்தவர். புத்ததத்தரின் சமகாலத்தவரான புத்தகோஷரும் தம்முடைய நூலில் சோழநாட்டை ஆட்சிபுரிந்த அச்சுதவிக்கந்தன் என்னும் களப்பிர அரசனைக் குறிப்பிடுகிறார்.

## சேர, சோழ, பாண்டியர்களை வென்றவன்

இவ்வச்சுதன் சேர, சோழ, பாண்டியர்களை வென்று தமிழ்நாட்டின் பெரும்பகுதியைத் தன்னாட்சிக்குக் கொண்டு வந்திருக்கிறான். முப்பெரும் பேரரசர்களை வென்றதனால் அவர்களின் இலச்சினைகளான வில், புலி, கயல் ஆகியவற்றைத் தன் அடையாளங்களாகக் கொண்டு விளங்கியிருக்கிறான் என்பதை இலக்கண நூலான யாப்பருங்கல விருத்தியுரை யாசிரியர் மேற்கோள்காட்டியுள்ள ஒரு பாடல் கீழ்வருமாறு விவரிக்கிறது.

5. A. P. Buddhadatta, *Contemporary Buddha Gosha*, University of Ceylon Review (1945) Vol. III, No. 1.

அடுதிறல் ஒருவ நிற்பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழில் மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
ஒன்றுகடல் உலகம் முழுவதும்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோன் எனவே.

இம்மன்னன் மூன்று பெரும் வேந்தர்களையும் வென்று அவர்களைச் சிறையிலிட்டு தளையிட்டபோது அம்மூவரும் இவனைப் புகழ்ந்து பாடியதாகக் கீழ்க்காணும் பாடல்களும் யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள்களாகக் காணப்படு கின்றன.

**சேரமன்னன் பாடியது**

தினைவிதைத்தார் முற்றம் தினையுணங்கும், செந்நெல்
தனைவிதைத்தார் முற்றமது தானாம் – கனைசீர்
முரசுணங்கும் சங்குணங்கும் மூரித்தேர்த் தானை
அரசுணங்கும் **அச்சுதன்**தன் முற்றத்து

**சோழ அரசன் பாடியது**

அரசர் குலதிலகன் **அச்சுதன்** முற்றத்தில்
அரச ரவதரித்த வந்நாள் - முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்.

**பாண்டிய மன்னன் பாடியது**

குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடகர் வடகடலென் றார்த்தார் - வடகடலர்
தென்கட லென்றார்த்தார் தில்லையச்சு தானந்தன்
முன்கடைநின் றார்க்கும் முரசு.

அச்சுதன் முற்றத்தில் முரசு, சங்கு, தேர்ப்படை ஆகியவை நிரம்பியிருக்கும் என்றும்; முரசு கொட்டுகின்ற ஓசையைவிட மாற்று அரசர்களின் கால் தளையை வெட்டிவிடும் ஓசையே அதிகமாகக் கேட்கும் என்றும் அவர்களது பாடல்களால் தெரிய வருகின்றன. மேலும் இவன் தில்லையச்சுதன் என்று பாராட்டப் படுகிறான். தில்லைக்கும் இவனுக்கும் எந்தவகையிலோ தொடர்பு இருந்திருக்கிறது. தில்லை நடராசப் பெருமானிடத்தில் ஈடுபாடு கொண்டிருந்தானோ அல்லது தில்லையம் பதியில் இவனது முன்னோர்களில் சிலர் தங்கியிருந்தார்களோ என்னவோ அறிய முடியவில்லை. ஆனால் களப்பிரர் சிலர் தில்லையை அடுத்துள்ள பகுதியில் இருந்திருக்கின்றனர் என்பதை பிற்காலச் சான்றுகளால் உணர முடிகிறது.

## அச்சுதனின் சமயப் பொறை

அச்சுதன் சமயப்பொறை நிரம்பியவனாக இருந்திருத்தல் வேண்டும் என்று தெரிகிறது. இவனது காலத்தில் சோழ நாட்டில் பூதமங்கலம், காவிரிப்பூம்பட்டினம், உறையூர் ஆகிய இடங்களில் பௌத்த விஹாரங்கள் இருந்தன என்பதை முன்னரே பார்த்தோம். இவன் சைவ சமயத்திலும் நாட்டமுடையவனாக இருந்திருக்கலாம் என்பது தில்லையோடு இவனைத் தொடர்பு படுத்திக் கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இவனைக் காத்தருள வேண்டும் என வைணவக் கடவுளான திருமால் சமணக் கடவுளான அருகன் ஆகியோரிடம் வேண்டிப் பாடப் பெற்ற பாடல்கள் இவன் வைணவ, சமண மதத்திலும் ஈடுபாடு கொண்டவன் என்பதைப் புலப்படுத்துகிறது.

யாப்பருங்கல விருத்தி என்னும் இலக்கண நூலின் உரையாசிரியர் தம்முடைய உரையில் நான்கு செய்யுட்களை மேற்கோள் காட்டியுள்ளார். அவை களப்பிர அரசனின் ஆட்சி ஓங்க வேண்டுமென்று விஷ்ணுவையும், அருகப் பெருமானையும் வேண்டிப் பாடப்பட்டனவாகும்.

'கெடலரு மாமுனிவர்' என்று தொடங்குகிற பாடல் அச்சுதன் என்னும் களப்பிர அரசனைக் காத்தருள வேண்டும் என்று திருமாலை வேண்டுகிறது. 'அலைகடற் கதிர்முத்தம்' என்று தொடங்கும் மற்றொரு செய்யுள் களப்பிர அரசன் சங்கு, சக்கரம்

ஏந்திய திருமாலை வழிபட்டு அவன் அருளினால் பெரியநிலத்தை ஆளும் பேறு பெற்றான் என்றும் அந்த அரசனைக் காத்தருள வேண்டும் என்றும் முறையிடுகிறது. 'அகலிடமும் அமருலகும்' என்று தொடங்கும் மற்றுமொரு பாடல் அச்சுதர்கோனினுடைய ஆற்றல், வீரம், கொற்றம் ஆகியவற்றைப் புகழ்கிறது. 'நலங்கிளர் திருமணியும்' என்று தொடங்கும் நான்காம் செய்யுள் களப்பிர அரசனுடைய ஆட்சி ஓங்கவேண்டுமென்று அருகக் கடவுளைத் துதிக்கிறது.

## வேள்விக்குடிச் செப்பேட்டில் களப்பிரர்

கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 8-ஆம் நூற்றாண்டுவரை அரசாண்ட பாண்டிய மன்னர்களின் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு மிகவும் இன்றியமையாததான வேள்விக்குடிச் செப்பேடுதான் களப்பிரர் என்ற ஒரு இனம் தமிழ் நாட்டைச் சில காலம் ஆண்டிருக்கிறது என்ற செய்தியை முதன் முதலில் கூறியதாகும். அதுவரையில் தமிழக வரலாற்றில் 'இருண்ட காலமாகக்' கருதப்பட்ட காலப்பகுதி, அதற்குப்பின் 'களப்பிரர் வருகைக் காலமாக' வரலாற்றாசிரியர்களால் சித்தரிக்கப்பட்டது. களப்பிரர் பற்றி செப்பேடு தரும் செய்தியைக் கீழே காண்போம்,

......அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி, அகலிடத்தை

க் **களப்ர னென்னுங் கலி அரசன் கைக்கொண்ட**
**தனை இறக்கியபின்** படுகடல் முளை

த்த பருதிபோல பாண்டியாதிராஜன் வெளிற்
பட்டு விடுகதிரவிரொளி விலக வீற்றி

ருந்து வேலை சூழ்ந்த வியலிடத்துக் கோவும்
குறும்பும் பாவுடன் முருக்கிச் செ

ங்கோலோச்சி வெண்குடை நீழற்றங்கொளி
நிறைந்த தரணி மங்கையைப் பிறர்

பாலுரிமை திறவிதி னீக்கித் தன்பாலுரிமை நன்கன
மமைத்த மானம்பே

ர்த்த தானை வேந்தன் னொடுங்கா மன்னரொளி
நகரழித்த கடுங்கோனென்னுங் கதி
ர்வேற் றென்னன்......[6]

மேலே தரப்பட்டுள்ள பகுதியில், 'அளவரிய ஆதிராஜரை அகலநீக்கி அகலிடத்தைக் களப்ரனென்னுங் கலி அரசன் கைக்கொண்டு,' எனும் தொடர் மிகவும் முக்கியப்பகுதியாகும். எண்ணற்ற ஆதி அரசர்கள் ஆண்டுகொண்டிருந்த நிலப்பரப்பை கலி மன்னனாகிய களப்பிரன் கைப்பற்றிக் கொண்டான் என்று கூறுகிறது. இங்கு ஓர் உண்மை புலனாகிறது. களப்பிரர் தமிழ்நாட்டுப் பகுதியைக் கைப்பற்றுகையில் ஒரு நிலையான அரசு இல்லாது, பல அரசர்கள் பல சிறு சிறு பகுதிகளை ஆண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. சங்க கால மூவேந்தர்களுக்குப்பின் தமிழகத்தில் குறுநில மன்னர்களின் செல்வாக்கு ஓங்கியிருக்கிறது. அந்த காலக் கட்டத்தில்தான் களப்பிரர்கள் அவர்களில் சிலரது உதவியைக் கொண்டு தமிழகத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.[7]

## தளவாய்புரச் செப்பேடு

களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் நிலவி, அதைப் பாண்டிய மன்னன் பராந்தக வீரநாராயணனின் முன்னோர் மாற்றி, திரும்பவும் பாண்டியர் ஆட்சியை நிலைக்கச் செய்ததைக் 'களப்பாழன் குலங்களைந்தும்' என்ற தொடரால் தளவாய் புரச் செப்பேடு உணர்த்துகிறது.

...தென்மதுராபுரஞ் செய்தும் ஆங்கதினில்லருந் தமிழ்
நற்சங்கம் இரீஇத் தமிழ்வளர்த்தும் ஆலங்கானத்
தமர்வென்று ஞாலங்காவல் நன்

---

6. பாண்டியர் செப்பேடுகள் பத்து, வேள்விக்குடிச் செப்பேடு, வரிகள் 39 - 46.

7. இதுபற்றி மேலும் அறிய படிக்க: முத்தரையர், நடன. காசிநாதன்

செய்தியும் கடி ஞாறு கவினலங்கற் **களப்பாழர்**
**குலங்களைந்தும்** முடி சூடிய முர

ண் மன்னர் ஏனைப்பலரு முன்னிகந்தபின் இடையா
றையும் எழில் வெண்பைக் குடி

யிலும் வெல்கொடி எடுத்த குடைவேந்தன் றிருக்குலத்
துக் கோமன்னர் பலர் க

ழிந்தபின்...[8]

...**களப்பாழரைக் களைகட்**

டமற்றிரண்டோண் மாக்கடுங்கோன்
மானம் பேர்த்தருளிய கோன் ...

(த. பு. செப்பேடு வரி, 131 - 132)

ஆகவே களப்பிரர் கி. பி. 3-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் வலிமை வாய்ந்த அரசர்களாக இருந்திருக்கின்றனர் என்பதும், கி. பி. 6-ஆம் நூற்றாண்டளவில் பாண்டியர் அவர்களை வென்று தாம் ஆளத் தொடங்கியிருக்கின்றனர் என்பதும் உணரற்பாலது.

## களப்ரர், களப்பாழர்

வேள்விக்குடிச் செப்பேட்டில் 'களப்ர' ரென்றும் தளவாய்புரச் செப்பேட்டில் 'களப்பாழர்' என்றும் களப்பிரர் குறிக்கப்படுகின்றனர். சங்க காலத்தில் 'கள்வர்' என்று குறிக்கப்படுவதாகப் புல்லி பற்றி குறிப்பிட்ட இடத்தில் கூறினோம். பிற்காலக் கல்வெட்டுக்களில் 'களப்பாளர்' என்று சிலர் குறிக்கப்படுகின்றனர். இச்சொற்கள் அனைத்தும் ஒரே இனத்தைத்தான் குறிக்கின்றனவா? அல்லது வெவ்வேறு இனத்தைக் குறிக்கின்றனவா? என்பதில் அறிஞர்களிடையே பெரும் கருத்து வேறுபாடு நிலவியது.

8. பாண்டியர் செப்பேடுகள் பத்து, தளவாய்புரச் செப்பேடுகள், வரிகள் 97 - 102

முதன் முதலில் வேள்விக்குடிச் செப்பேட்டின் மூலம் 'களப்பிரர்' என்னும் சொல் தெரியவந்தது. பின்னர் கல்வெட்டுகள் சிலவற்றில் 'களப்பாளர்' என்னும் சொல் வழங்கப் பெற்றிருப்பது தெரியவந்தது. அந்தக் காலக்கட்டத்தில் வரலாற்றாசிரியர்களில் சிலர் களப்ரரென்பாரும் களப்பாளர் என்பாரும் ஒரே இனத்தவர்தான் என்று முடிவு செய்தனர்.[9] ஆனால் சதாசிவ பண்டாரத்தார் போன்றோர் களப்ரர் வேறு களப்பாளர் வேறு என்றும், களப்ரர் வடபுலத்திலிருந்து வந்தோர் என்றும்; களப்பாளர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்றும் வாதிட்டனர்.[10] இவ்வாக்குவாதங்கள் தளவாய்புரச் செப்பேடு கிடைக்காத காலம் வரை நிகழ்ந்தது. தளவாய்புரச் செப்பேடு கிடைத்து, அதில் களப்ரர், களப்பாழர் என்று குறிக்கப் பட்டிருப்பதை அறிந்ததும் களப்ரரும் களப்பாளரும் ஒரே இனம்தான் என்ற முடிவுக்கு வந்தனர்.[11] களப்பாழர் என்னும் சொல் களப்பாளர் என்று மாறக்கூடியதேயாகை யால் அவர்கள் அவ்வாறு தீர்மானிக்க நேர்ந்தது.

## கள்வரும் களப்ரரும்

நாம் முன்னரே கூறியிருப்பதுபோல் கள்வர் கோமான் என்று குறிப்பிடப்படும் புல்லியும் களப்ரனே என்று சிலர் கருதினர். அதற்கு அவர்கள் ஆதாரமாகச் செந்தலையிலுள்ள முத்தரைய மன்னன் கல்வெட்டில்[12] காணப்படும் 'கள்வர் கள்வன்' என்ற பட்டப்பெயரை உதாரணம் காட்டினர். 'கள்வர் கள்வன்'' என்பதைக் 'களவர களவன்' என்றும் படிக்கலாம் என்றும் கள்வர் கோமான் என்பதற்குக் களவர கோமான் என்ற பாட பேதமும் உண்டு என்றும், களவர என்பது களப்ர என்னும் சொல்லின் திரிபு என்றும் வலிந்து ஆதாரங்களைத் தேட

9. மு. இராகவையங்கார், இலக்கிய சாஸன வழக்காறுகள், பக்கம் 78.

10. டி. வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, (1969), பக்கங்கள் 32 - 33,

11. பாண்டியர் செப்பேடுகள் பத்து, பிற்சேர்க்கை 4 பக்கம் அ44.

12. Epigraphia Indica vol. XIII, No. 134.

லாயினர்.[13] ஆனால் களப்ரரும், கள்வரும் ஒரே இனம்தான் என்பதை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொன்னி வாடிக் கல்வெட்டு தெளிவாக உணர்த்திவிட்டது. அக்கல் வெட்டின் வாசகம்,

1. ஸ்வஸ்திஸ்ரீ சந்த்ராதித்ய குலதிலகன் சா
2. ர்வ பௌமன் கலிநிருவ (ப) கள்வனாயின கோ
3. க்கண்டன் இரவி...........[14]

என்பதாகக் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் 'கலிநிருப கள்வனாயின கோக்கண்டன் இரவி' என்று வருவது கள்வனாயின கோக்கண்டன் இரவி என்னும் அரசன் கலி அரசன் தான் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதே போன்றுதான் வேள்விக்குடிச் செப்பேட்டிலும் 'களப்ரனென்னும் கலி அரசன்' என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே களப்ரர், கள்வர் ஆகியோர் ஒரே இனத்தவர்தான் என்பது தெளிவாகிறது.[15]

## பல்லவர்களின் எதிரி களப்பிரர்

வேங்கடமலைப் பகுதியிலிருந்து தெற்கே நுழைந்த களப்பிரர்கள் முதலில் மழநாட்டை வென்று பின்னர் மேலும் தெற்கு நோக்கிச் சென்றிருக்கக் கூடும் என்று முன்னரே தெரிவித்தோம். அவர்கள் அவ்வாறு தெற்குத் திசையை நோக்கிச் சென்றதற்குப் பல்லவர்கள் வலிமை வாய்ந்தவர்களாக இருந்ததுதான் காரணமாக இருக்கவேண்டும் என்றும் கூறப் பட்டது. ஆனால் அடிக்கடி பல்லவர்களுக்கும் களப்பிரர் களுக்கும் போர் நிகழ்ந்திருக்கிறது. அதில் களப்பிரர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

13. Journal of Indian History Vol. VIII.
14. Epigraphia Indica Vol. XXXVIII, No. 6. page. 39.
15. 'Kalabhras identified', *South Indian Studies* Vol. II, P. 184.

## சிம்மவிஷ்ணு காலம்

பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு தன் ஆட்சிக் காலத்தில் மாளவத்தையும், பிறகு களப்ர, மாளவ, சோழ, பாண்டியர்களையும், சிங்கள மன்னனையும், கேரள மன்னனையும் வென்றதாகக் காசாக்குடிச் செப்புப்பட்டயம் கூறுகிறது.[16] இதில் இருமுறை மாளவர்கள் குறிக்கப்படுகின்றனர். முதலில் குறிக்கப் படுவது மட்டும் மாளவர்களைக் குறிக்கத்தான் என்று கொள்ள லாம். களப்ரர்களை அடுத்துவரும் சொல் மழவர்களைச் சுட்டு வதாக இருக்கலாம் என்று டி. என். சுப்பிரமணியம் அவர்கள் கருதியிருக்கிறார்.[17] அது சரியான யூகமாகவே தோன்றுகிறது. ஏனெனில் களப்பிரர் ஆண்ட பகுதியை அடுத்து மழநாடே இருந்திருக்கிறது. ஆதலால்தான் களப்பிரர்களை அடுத்து மழவர்கள் குறிக்கப்படுகிறார்கள் என்று கருத இடமுண்டு.

## முதலாம் நரசிம்மவர்மன் காலம்

சிம்மவிஷ்ணுவின் பெயரனும், மகேந்திரவர்மனின் மகனு மான முதலாம் நரசிம்மவர்மனும் களப்பிரர்களை வென்றிருப் பதாகக் கூறும் செய்தி செப்பேடுகளில் காணப்படுகிறது. அச்செப்பேடுகளில் "எதிரி மன்னர்களாகிய யானைக் கூட்டங் களுக்குச்சிங்கம் போன்றவனும், நரசிம்மபகவான் தாமே அரசன் உருவத்தில் பூலோகத்திற்கு வந்தவரே போன்றவனும், திரும்பத் திரும்பச் சோழ, கேரள, களப்ர, பாண்டியர்களை வெற்றி கொண்டவனும்"[18] என்று புகழப்படுகிறான். இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டியுள்ளது. சோழ, கேரள, களப்ர, பாண்டிய மன்னர்களைப் பலமுறை வென்றவன் என்று குறிக்கப் படுகிறான். அவ்வாறாயின் மற்ற மன்னர்களைப் போன்றே களப்பிரர்களும் பல்லவர்களுக்குப் பெரும் இடையூறாக இருந் திருக்கின்றனர் என்பது புலனாகிறது. களப்பிரர்களும் பல்லவர் களை அடிக்கடி எதிர்க்கும் அளவுக்கு வலிமை வாய்ந்தவர் களாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் உணர முடிகிறது.

---

16. பல்லவர் செப்பேடுகள் முப்பது, காசாக்குடி செப்பேடுகள், சுலோ கம் 20, பக்கம் 174.

17. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக்கம் 12,

18. பல்லவர் செப்பேடுகள் முப்பது, கூரம் செப்பேடுகள், சுலோகம் 4, வரி 12, பக்கம் 55,

## இராஜசிம்மன் காலம்

பல்லவ மன்னன் இராஜசிம்மன் சூட்டியிருந்த பல பட்டப்பெயர்களில் 'காலகாலன்', 'காலவிக்ரமன்' என்பவைகளும் அடங்கும். காலகாலன் என்பது 'கூற்றுவனுக்குக் கூற்றுவன்' என்றும், காலவிக்ரமன் என்பது 'கூற்றுவனையும் வெற்றி கண்டவன்' என்றும் பொருள் கொள்ளப்படும். இங்கு கூற்றுவன் என்பது உயிர்களைப் பறிப்பதாகக் கருதப்படும் யமனைக் குறிக்கிறதா? அல்லது கூற்றுவன் என்னும் பெயர் தாங்கியிருந்த ஒரு மன்னனைக் குறிக்கிறதா? என்பது ஐயப் பாடே. ஆன்ாலும் சிலர் கூற்றுவன் என்னும் மன்னனையே குறிப்பிடுகிறது என்று பொருள் கொண்டு கூற்றுவ நாயனார் என்று நாயன்மார்களுள் ஒருவராகக் கருதப்படுபவரோடு தொடர்பு படுத்தியிருக்கின்றனர்.[19] இக்கூற்றுவர் களப்பாளர் ஆனதால் இராஜசிம்மனும் களப்பிர அரசரை வென்றதாகக் கருதப்படுகிறது.

### கூற்றுவ நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் கூற்றுவநாயனாரும் ஒருவராகப் பெரியபுராணத்தில் குறிக்கப்படுகின்றார். இவர் களப்பிரர் குலத்தைச் சேர்ந்தவர் என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார்நம்பி கூறுகிறார்.

நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொதிந்தமை யாலது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலமெல் லாம்ஒரு கோலின்
வைத்தான்
கோதை நெடுவேற் **களப்பாள னாகிய கூற்றுவனே**[20]

இவர் களந்தை என்னும் பகுதியை அரசாண்டவர் என்பதைச் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் காணப்பெறும்,

'ஆர்கொண்ட வேர்கூற்றன் **களந்தைகோன்**
அடியேன்'

என்னும் வரியால் உணரலாம்.

19. கலைமகள் தீபாவளி மலர் 1959.
20. திருத்தொண்டர் திருவந்தாதி 47.

இக்கூற்றுவன் சோழநாட்டு முடியைச்சூடி அரசாள வேண்டுமென்று விரும்பி, சோழர்தம் முடியை சூட்டுவிப் போராகிய தில்லைவாழ் அந்தணர்களிடம் சென்று, தமக்குச் சோழர்தம் முடியைச் சூட்டுமாறு கேட்டான். அவர்கள் சோழ அரசர்குடியில் பிறந்தவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு முடிசூட்ட மாட்டோம் என்று கூறிவிட்டு சேரலன் நாடாகிய மலைநாட்டுக்குச் சென்றுவிட்டனர் என்றும், அதனால் மனம் தளர்ந்த கூற்றுவனார் சோழர்தம் முடியைச் சூட்டிக்கொள் ளாமலேயே அரசாண்டார் என்றும் பெரியபுராணம் விரித் துரைக்கிறது.

மல்லல் ஞாலம் புரக்கின்றார் மணிமா
மவுலி புனைவதற்குத்
தில்லை வாழந் தணர்தம்மை வேண்ட அவருஞ்
**செம்பியர்தம்**
**தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச்**
**சூட்டோம் முடி**யென்று
நல்கா ராகிச் சேரலன்தன் மலைநா டணைய
நண்ணுவார்.

ஒருமை உரிமை தில்லைவா ழந்தணர்கள், தம்மில்
ஒருகுடியைப்
பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும்படி
இருத்தி
இருமை மரபுந் தூயவர்தாம் சேரர் நாட்டில்
எய்தியபின்
வரும்ஐ யுறவால் மனந்தளர்ந்து மன்றுள் ஆடும்
கழல்பணிவார்.[21]

என்பவைகளாகும் அப்பாடல்கள்.

'திருத்தொண்டர் புராணப் பயன்' என்னும் திருத்தொண் டர் புராணச்சாரத்தில், கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்,

21. கூற்றுவ நாயனார் புராணம் 4, 5.

குன்றாத புகழாளர் **களந்தை வேந்தன்,**
கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப்
பொன்றாழு முடிவேண்டப், புலியூர் வாழும்
பூசுரர்கள் கொடாதகலப், புனித னீந்த
மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி,
மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயிற்
சென்றா சையுடன் வணங்கிப் பணிகள்செய்து,
திருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே[22]

என்று பாடுகிறார். இதில் கூற்றுவனாரைக் 'களந்தை வேந்தன்' என்று தெரிவித்திருக்கிறார்.

## களந்தை எங்குளது?

களந்தை என்னும் ஊர் எந்த நாட்டில் இருந்தது என்பதும் சரிவர ஆராயப்படவில்லை. மயிலை சீனி. வேங்கடசாமி சோழ நாட்டிலிருந்தது எனக்கொண்டு கூற்றுவனாரைச் சோழநாட்டைச் சேர்ந்தவர் என்கிறார்.[23] சோழ நாட்டிலேயே ஒரு பகுதியாகக் களந்தை இருக்க அப்பகுதிக்குத் தலைவனாகக் கூற்றுவன் ஆண்டிருப்பின் தில்லைவாழ் அந்தணர்கள் அவருக்குச் சோழரது முடியைச் சூட்டாது மலைநாடு ஏகியமை வியப்பாக உள்ளது.

அடுத்து, கே. கே. பிள்ளை, களந்தை தொண்டை நாட்டைச் சேர்ந்த ஊர் என்று கருதுகிறார்.[24] அவர் கூறுவது ஓரளவுக்குப் பொருத்தமே என்றாலும் தொண்டை நாட்டில் எந்த இடத்தில் உள்ள களந்தை என்பதை அவர் ஆராய முற்படவில்லை.

ஆனால் மேலே கூறிய இரு கூற்றுக்களுக்கும் மாறாகப் பாண்டிய நாட்டில்தான் அக்களந்தை இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. பாண்டிய நாட்டில் களந்தை என்ற

---

22. திருத்தொண்டர் புராணப்பயன்.
23. மயிலை. சீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பக்கம் 26.
24. கே. கே. பிள்ளை, தமிழக வரலாறும் - மக்களும் பண்பாடும், பக்கம் 182.

ஊர் இருந்திருக்கிறது. அதற்குக் கரவந்தபுரம் என்று மற்றொரு பெயரும் உண்டு. அவ்வூரைச் சார்ந்தவர்கள் பாண்டிய மன்னர்களிடத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்திருக்கிறார்கள். பாண்டிய மன்னன் ஜடிலவர்மப் பராந்தக நெடுஞ்சடையனிடம் உத்தரமந்திரியாக இருந்த மாறங்காரி, இவனது உடன் பிறந்தவனான மாறன்எயினன் ஆகியோர் களந்தையைச் சேர்ந்தவர்களே. மேலும் இம்மன்னனின் காலத்தில் இருந்த மகாசாமந்தர்களான மூர்த்திஎயினன், சாத்தங்கணபதி ஆகியோரும் இவ்வூரினின்றும் வந்தவர்களே.[25] ஆகவே பாண்டியர் காலத்தில் சிறந்த அரசு அதிகாரிகளை அளித்து வந்த களந்தையே கூற்றுவநாயனாருடைய நாடாகவும் இருக்கலாம். பாண்டிநாட்டுக்காரரான அவருக்குச் சோழர்தம் முடியைச் சூட்ட மாட்டோம் என்று தில்லைவாழ் அந்தணர்கள் மறுத்திருப்பது பொருள் உள்ளதாகப் புலப்படுகிறது. ஆதலால் கூற்றுவநாயனாரின் களந்தை பாண்டிய நாட்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம்.

## பூலாங்குறிச்சி கல்வெட்டு

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, இராமநாதபுர மாவட்டம், பூலாங்குறிச்சியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரிய கல்வெட்டைக் கண்டு பிடித்துள்ளது.[26] அக்கல்வெட்டு கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. அது சேந்தங் கூற்றன் என்னும் ஒரு மன்னனின் காலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அம்மன்னன் சேந்தன் என்பவனின் மகனாக இருக்கலாம் என்றும் கருதுவர். இக்கல்வெட்டு பலவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. அக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய அரசியல் அமைப்பு, நீதி, நிர்வாகம், நாட்டுப் பிரிவு

25. 'ஈங்கிதனுக் காணத்தியாய்த் தாம்ரசாசனஞ் செய்வித்தான்
வாத்யகேயசங்கீதங்களான் மலிவெய்திய வண்களந்தை
வைத்ய குலம் விளங்கத் தோன்றி மன்னவற்கு மகாசாமந்தனாய்
மாற்றரசரை வலிதுலைக்கும் வீரமங்கலப் பேரரைசனாகிய
தீரதரன் மூர்த்தி எயினன்.'

பாண்டியர் செப்பேடுகள் முப்பது, சீவரமங்கலச் செப்பேடுகள், வரிகள் 75 - 81.

26. டி. துளசிராமன், தொல்பொருள் அலுவலர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, இக்கல்வெட்டைக் கண்டுபிடித்தார்.

ஆகியவைகளைப் பற்றித் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. அதில் காணப்பெறும் மன்னன் கூற்றனுக்கும் கூற்றுவ நாயனாருக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமா என்பது தெரியவில்லை.

கல்வெட்டில் காணப்படும் ஆண்டு பற்றிய குறிப்பைப் பார்த்தால் கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்குத்தான் கணக்கிட முடிகிறது. ஆனால் எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கையில் கி.பி. 4 அல்லது கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். அவ்வாறாயின் இந்தக் கூற்றன்தான் சைவசமய நாயன்மாராக மாறிய கூற்றுவ நாயனாரோ? என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. களப்பிரர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தைச் சார்ந்ததாக இக்கல்வெட்டு இருப்பதாலும், கூற்றுவநாயனார், களப்பாள மன்னன் என்று கூறப்படுவதாலும் கூற்றன் தான் கூற்றுவ நாயனாரோ என்ற ஐயம் மேலும் வலுப்பெறுகிறது.

## மூர்த்தி நாயனார்

இங்கே மற்றொரு நாயனாரான மூர்த்திநாயனாரைப் பற்றியும் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மதுரை நகரத்தில் வணிகர் குலத்தில் பிறந்து சிவத்தொண்டு புரிந்து வத்தார் மூர்த்தி என்னும் சிவபக்தர். சிவபெருமானுக்கு நாள்தோறும் சந்தனக் காப்பு சாத்துவதற்கு வேண்டிய சந்தனத்தை அரைத்துக் கொடுக்கும் பணியை அவர் மேற்கொண்டிருந்தார்.

அவ்வாறு நடைபெற்றுவரும் நாளில் பாண்டிய நாட்டைக் கருநாடக மன்னன் ஒருவன் கைப்பற்றிக் கொண்டான். அவன் சமண சமயத்தைத் தழுவியவன். அம்மதத்தைப் பரப்புவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலானான். பிறமதத்தைச் சார்ந்த ஆலயங்களில் பூசை நடவாதவாறு பல்வித இன்னல்களை ஏற்படுத்தினான்.

சந்தனம் அரைத்துச் சாத்துவதற்கு வேண்டிய சந்தனம் கூட கிடைக்காமல் தட்டுப்பாட்டை ஏற்படுத்தினான். பெரும் சிவ பக்தரான மூர்த்தி நாயனார், ஒருநாள் சந்தனக் கட்டை

[library stamp]

காத காரணத்தால் தன் முழங்கையைக் கல்லில் தேய்க்கலானார். இரத்தம் பீறிட்டது. பக்தனின் துயர் பொறுக்காத இறைவன் 'அன்பனே எம்மிடம் நீ கொண்டுள்ள பக்தியால் செய்யத் துணிந்த இக்கொடிய செயலினை நிறுத்து. உனக்கு இடர் விளைவித்த அரசன் இறந்து போவான். அவன் அரசை நீயே கைப்பற்றிக் கொண்டு எமக்குச் செய்து வரும் திருப்பணியை நன்றாக நடத்தி நம்மிடம் சேர்வாயாக' என்று அசரீரியாகக் கூறச் செய்தார்.

அதேபோன்று கொடுஞ்செயல் புரிந்த அம்மன்னன் இறந்தான். மூர்த்தி மன்னனாக்கப்பட்டார். திரும்பவும் சிவ வழிபாடு சிறப்புற நடந்தேறின. இது மூர்த்தி நாயனாரது கதை.

> கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்
> மானப் படைமன்னன் வலிந்து நிலங்கொள் வானாய்
> யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்தேர்
> சேனைக் கடலுங் கொடுதென்திசைநோக்கி வந்தான்.
> வந்துற்ற பெரும்படை மன்புதையப் பரப்பிச்
> சந்தப் பொதியில் தமிழ்நாடுடை மன்னன் வீரம்
> சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்து மாற்றால்
> கந்தல் பொழில்சூழ் மதுராபுரி காவல் கொண்டான்[27]

என்று பெரியபுராணம் கருநாடக மன்னன் மதுரையின் ஆட்சியைக் கைப்பற்றியதைக் குறிப்பிடுகிறது-

இதே செய்தியைக் கல்லாடம் என்னும் இலக்கியமும்

> படைநான் குடன்று பஞ்சவன் துரந்து
> மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
> அருகர்ச் சார்ந்துநின்று அரன்பணி அடைப்ப

27. பெரியபுராணம், மூர்த்தி நாயனார் புராணம், பாடல் 11, 12.

என்று கூறுகிறது. இம்மன்னன் கருநாடகத்தைச் சார்ந்தவன் என்பதாலும், சமண மதத்தைத் தழுவியவன் என்பதாலும் களப்பிர மன்னனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு களப்பிரர்கள் சமண மதம் அல்லாத பிற மதங்களைக் கடுமையாக எதிர்த்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.[28] இக்கருத்து எந்த அளவுக்குத் தவறான கருத்து என்பதை களப்பிரர் சமயம் என்னும் பகுதியில் விரிவாக விளக்கப்படும்.

## சாளுக்கியர்களுக்கும் களப்பிரர்கள் எதிரி

சாளுக்கிய மன்னர்களுள் சிலர் தம் செப்பேடுகளில் சேர சோழ, பாண்டிய மன்னர்களை வென்றதோடு களப்பிரர் களையும் வென்றதாகக் கூறிக்கொள்கின்றனர். முதலாம் விக்கிரமாதித்தன் (கி. பி. 655-81) பல்லவ மன்னர்களான முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேஸ்வரவர்மன் ஆகியோரை வென்றவன் என்று ஹைதராபாத் செப்பேடு தெரிவிக்கிறது. அவனது வழிவந்த பிற்கால மன்னர்களின் செப்பேடுகளில் சோழ, பாண்டிய, கேரள அரசர்களையும் அவன் வென்றதாகப் புகழப்படுகிறான். இன்னும் சில செப்பேடுகளில் அவன் களப்பிரரையும் வென்றதாகக் குறிக்கப்படுகிறான்.[29]

அவனது அருமை மைந்தனான வினயாதித்யன் கி.பி. 681 - 96) தம்முடைய செப்பேடுகளில் பல்லவர், களப்பிரர், கேரளவர், கைஹேயர், விளர், மழவர், சோழர், பாண்டியர் ஆகியோரைத் தோற்கடித்ததாகக் கூறிக் கொள்கிறான்.[30]

இரண்டாம் நந்திவர்மப் பல்லவமல்லனை வெற்றி கொண்டு, காஞ்சிக்குள் புகுந்து அம்மாபெரும் நகரத்தையே அழித்து, மண்மேடாக்கி விடவேண்டும் என்ற வெறியோடு வந்த வெற்றி வீரனை வெற்றி கொண்ட பெரிய திருக்கற்ற ளியாகிய இராஜசிம்ம ஈஸ்வரத்தின் அழகில் மயங்கி அதனை

28. இரா. பன்னீர்செல்வம், தமிழ்நாடும் களப்பிரர் ஆட்சியும், பக்கம், 45.

29. R, C, Majumdar, The Classical Age, Bharatiya Vidya Bhavan, Series Volume III, Page. 249.

30, Harihar grant of Vinayaditya,

அழிக்காது, அதற்கு மேலும் பல பொற்றானங்களை வழங்கிய கலாரசிகன் இரண்டாம் விக்கிரமாதித்தனும் (கி. பி. 733-745) பாண்டியர், சோழர், கேரளர், களப்பிரர் மற்றும் பல அரசர்கள் ஆகியோரை வென்றதாகச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.[31] ஆகவே சாளுக்கியர்களைப் பல்லவர், பாண்டியர், சோழர், கேரளர் ஆகியோர் எதிர்த்ததைப் போன்றே களப்பிரர்களும் எதிர்த்திருக்கின்றனர் என்பது புலனாகிறது. மேலும் களப்பிரர்கள் தமிழ் நாட்டில் ஒரு பகுதியில் தான் ஆண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் ஊகிக்க முடிகிறது.

## நந்திவர்மப் பல்லவமல்லன் காலத்தில்

கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னனான இரண்டாம் நந்திவர்மப் பல்லவமல்லனும் களப்பிரர்களை வென்றதாக அவனது பட்டத்தாள்மங்கலச் செப்பேடு[32] தெரிவிக்கிறது.

''புகழ்மிக்க வலிமை கொண்டவனும் ஒளி வீசும் வாளை உருவிக் கையிலேந்தியவனும் ஒப்பற்ற தனி வீரருமான' அந்த அரசன் இளைஞனாக இருக்கும்போதே ராஜ்யத்தை அடைந்து, எல்லா எதிரிகளையும் வென்று, வணங்கிய எல்லா அரசர்களுடைய முடிகளையே தன் திருவடிப் பீடமாகக் கொண்டான்.

அவனுடைய (அரண்மனை) வாயிற்புறத்தில் வல்லபர், களப்பிரர், கேரளர், பாண்டியர், சோழர், துளுவர், கொங்கணர், இன்னும் மற்றோர் உள்ளே நுழைந்து சேவிக்கச் சமயத்தை எதிர்பார்த்து நெருங்கிக் கொண்டிருக்கின்றனர்'' என்பது அதில் காணப்பெறும் சுலோகங்களின் மொழி பெயர்ப்பாகும்.[32]

---

31. R. C. Majumdar, The Classical Age, Bharatiya Vidya Bhavan Series, Volume III, Page 247.

32. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பட்டத்தாள்மங்கலம் செப்பேடு, சுலோகம் 7, 9; பக்கம் 246.

ஆகவே கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சாளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிரமாதித்தனும், சற்று பின்பு பல்லவ மன்னன் நந்திவர்மப் பல்லவனும் களப்பிரர் களை வென்றிருக்கின்றனர். கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலும் களப்பிரர்கள் வலிமை வாய்ந்தவர்களாகத் தமிழகத்தில் விளங்கியிருக்கிறார்கள் என்பதை ஒருவாறு புரிந்து கொள்ள லாம்.

## திருமங்கையாழ்வார் களப்பிரரா ?

வைணவப் பெரியார்களுள் திருமங்கையாழ்வார் மன்ன ராக இருந்து ஆழ்வாராக மாறியவராவார். அவர் பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தைச் சார்ந்தவர் என்று கருதப் பட்டது.[33] தற்போது தந்திவர்மனின் தந்தையான நந்தி வர்மன் பல்லவமல்லன் காலத்தைச் சேர்ந்தவர் என்று கருதப் படுகிறது.[34]

களப்பிரரைக் களவர் என்றும் அழைக்கப்படுவதால் திருமங்கையாழ்வாரும் களப்பிரரே என்று கருதப்படுகிறது.[35] களப்பிரர்களும் முத்தரையர்களும் ஒரே இனத்தவரே என்று கருதுவோர் திருமங்கையாழ்வாரை முத்தரையர் என்றும் கூறுகின்றனர். செந்தலைக் கல்வெட்டில் மாறனுக்குக் காணப் பெறும் பல பட்டப் பெயர்களுள் 'கள்வர் கள்ளன்' என்பதும் ஒன்றாகும். அந்தப் பட்டப்பெயரைக் கொண்டு சிலர் முத்தரை யர்களும், களப்பிரர்களும் ஒருவரே என்று வாதாடுகின்றனர்.[36] அப்பட்டப் பெயரை களவர்களுக்கு கள்ளன் என்ற பொருளில் எடுத்துக் கொண்டு முத்தரையர் களப்பிரர்களுக்கு எதிரியா வார் என்ற ஒரு கருத்தும் தற்போது நிலவுகிறது.[37] எது எவ்வாறாக இருப்பினும் திருமங்கையாழ்வார் சபர குலத்தில்

---

33. T. A. Gopinatha Rao, Sri Subrahnanya Ayyar Lectures on the History of Srivaishnavas, (1923), P. 26.

34. Dr. R. Nagaswamy, Studies in Ancient Tamil Law and Society. P. 19.

35. அரிசமயதீபம், பரகாலச் சருக்கம்.

36. Epi. Indica, Vol. XIII, P. 135.

37. நடனா, காசிநாதன், முத்தரையர், பக். 54-55.

அவதரித்தவர் என்று திவ்யசூரி சரிதம் தெரிவிப்பது கள்வர் குலத்தையே எனக்கருதப்படுவதால் அவரைக் களப்பிரர் என்று கருதவாய்ப்புண்டு.[38] மேலும் தற்காலத்தில் தஞ்சைப் பகுதியில் வாழ்ந்துவரும் கள்ளர் மரபினர் களப்பிரர்களின் வழி வந்தவர்களே என்று கருதப்படுவதாலும் திருமங்கையாழ்வாரும் களப்பிரராக இருக்கலாம் என்னும் கருத்து வலுப்பெறுவதாக உள்ளது.

## திருமங்கை ஆழ்வார், சிறந்த தமிழ்ப்புலவர்

பெற்றோர்களால் செல்லமாக நீலன் என்று பெயர் பெற்றிருந்த இவர் தம் இளம் வயதில் 'நாற்கவிப் பெருமாள்' என்னும் தமிழ்ப்புலவர் ஒருவரை வாதில் வென்று நாற்கவிப் பெருமாள் என்னும் பட்டப் பெயரை அப்புலவரால் அளிக்கப் பெற்றார். அதனை அறிந்த சோழ அரசனும் இவரை அழைத்து மேலும் பல பரிசுகள் அளித்துச் சிறப்பித்தான்.

## ஆலி நாட்டு மன்னர்

இவருடைய போர்த் திறமையை அறிந்து சோழநாட்டு மன்னன் சோழ நாட்டில் உள்ள ஆலிநாடு என்னும் பகுதியை இவருக்கு அளித்து அப்பகுதிக்குத் திருமங்கை என்னும் ஊரைத் தலைநகராக்கிப் **'பரகாலன்'** என்னும் வீரப்பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தான்.[39] திருமங்கை என்னும் ஊரைத் தம் நாட்டின் தலைநகராகக் கொண்டிருந்ததால் தான் திருமங்கை மன்னன் என்று அழைக்கப்பட்டார்.

## ஆழ்வார்களில் ஒருவர்

ஆட்சி நிர்வாகத்தில் மூழ்கி இருந்த திருமங்கை மன்னனுக்கு வைணவ சமயத்தில் பற்று ஏற்பட்டது. இறைவனே இவரின் காதில் மந்திரங்களை ஓதினார் என்று கூறப்படுகிறது. அதன் பிறகு வைணவத் தலங்களுக்கெல்லாம் சென்று ஆங்காங்குள்ள இறைவன் மீது பக்திப் பாசுரங்கள் பாடி மகிழ்ந்திருக்கிறார்.

---

38. மு. இராகவையங்கார், இலக்கிய சாசன வழக்காறுகள், பக். 100.

39. 2-ஆம் பத்து, 4-ம் திருமொழி, பா. 10.

இவரது பாசுரங்கள் 'பெரிய திருமொழி' என்று கூறப்படுகின்றன. வைணவ ஆழ்வார்களுள் ஒருவராக இவர் மதிக்கப்பட்டு திருமங்கை ஆழ்வார் என்று அழைக்கப்படலானார்.

## அபராஜிதன் காலம்

நந்திவர்மப் பல்லவ மன்னனுக்குப் பிறகு அவனது வழி வந்தோனான அபராஜிதப் பல்லவன் காலத்திலும் களப்பிரர்கள் செல்வாக்கு பெற்றிருந்திருக்கின்றனர்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அண்மையில் கண்டுபிடிக்கப் பெற்ற வேலஞ்சேரிச் செப்புப் பட்டயத்தில் களப்பிரர் குலமான ஆகாயத்தில் உலவும் சூரியனாக அபராஜிதன் குறிக்கப்படுகிறான்.[40] அபராஜித பல்லவன் கி. பி. 870 முதல் 890 வரை ஆண்டதாகக் கருதப்படுகிறது.[41] அவ்வாறெனில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் கூட களப்பிரர்கள் தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை.

## முத்தரைய மன்னர் சுவரன்மாறன் காலம்

தமிழகத்தில் முத்தரையர்களும் வலிமைபெற்ற அரசர்களாக இருந்திருக்கின்றனர். அவர்களும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் சிறு பகுதியை ஆண்டு வந்திருக்கின்றனர். கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டளவில் அவர்களது தலைநகர்களாகத் தஞ்சையை அடுத்துள்ள வல்லம், நியமம் ஆகியவைகள் இருந்திருக்கின்றன.

சோழ மன்னன் விஜயாலயன் முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றியிருக்கிறான். முத்தரைய மன்னர்களுள் மிகவும் புகழ் வாய்ந்தவன் சுவரன்மாறன் என்னும் அரசனாவான். இவன் பல்லவ மன்னன் தெள்ளாறெறிந்த நந்திவர்மனுக்கும், பாண்டிய மன்னன் மாறஞ்சடையனுக்கும் சமகாலத்தவனாவான். அதாவது கி.பி· 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன்.

40. Dr. R. Nagaswamy, Thiruttani and Velancheri Copper-Plates, Velancheri Plates of Aparajita, translation, P. III.

41. Ibid P. 8.

சுவரன் மாறன் பல போர் புரிந்து பல ஊர்களை வென்றிருக்கிறான். கொடும்பாளூர், மணலூர், திங்களூர், காந்தளூர், அழுந்தியூர், காரை, மறங்கூர், அண்ணல்வாயில், செம்பொன் மாரி, வெண்கோடை, புகழி, கண்ணனூர் ஆகிய இடங்களில் போரிட்டுப் பகைவர்களை வென்றிருக்கிறான்.

இம்மன்னன் நியமத்தில் பிடாரிக்குக் கோயில் எடுப்பித்திருக்கிறான். அக்கோயில் எடுப்பித்த செய்தியைத் தெரிவிக்கையிலேயே தான் வெற்றி கொண்ட ஊர்களின் பெயர்களையும், தனது பட்டப்பெயர்களையும் கல்லில் பொறிக்கும்படி கட்டளை யிட்டிருக்கிறான். "சுவரன் மாறனவன் எடுப்பித்த பிடாரி கோயில் அவனெறிந்த ஊர்களு மவன் பேர்களும் அவனைப் பாடினார் பேர்களும் இத்தூண்கண் மேலேழுதின இவை" என்று செந்தலையில் ஒரு தூணில் பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். அதே தூணின் மறு பக்கத்தில் அவனது பட்டப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அப்பட்டப் பெயர்களுள் ஒன்று "கள்வர் கள்வன்" என்பதாகும். ஆதலால் அவன் களப்பிரரை வென்றிருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது.

## கள்வர் கள்வன் என்பதின் பொருள் என்ன?

'கள்வர் கள்வன்' என்னும் இப்பட்டப் பெயர் பலவாறாகப் பொருள் கொள்ளப்படுகிறது. டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள் முதலான பல வரலாற்றாசிரியர்களால் களப்பிரர்களின் தலைவன் என்றே இதற்குப் பொருள் கொள்ளப்பட்டது. அவ்வாறு பொருள் கொண்டதால் சுவரன் மாறன் என்ற முத்தரைய மன்னனும் களப்பிரர் வழி வந்தவன் என்று வாதிட்டனர். ரா. இராகவையங்கார் போன்றோர் களப்பிரர்களும் முத்தரையர்களும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறினர். முத்தரையர் என்னும் நூலில் இந்நூலாசிரியர் கள்வர் கள்வன் என்பதற்கு கள்வர்களுக்குக் கள்வன், கள்வர்களின் எதிரி என்று பொருள் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அதை மறுக்கும் வகையில் 'கள்வர் கள்வன்' என்பதைக் களப்பிரர்களுக் கெல்லாம் களப்பிரனாக விளங்கினான் எனப் பொருள் கொள்ள வேண்டும் என்றும், மன்னாதி மன்னன், சூராதி_சூரன், வில்லாதி

வில்லன் ஆகிய சொற்களோடு இணைத்துப் பார்த்திடல் வேண்டும் என்றும் இராசசேகர தங்கமணி எழுதியுள்ளார்.[42]

## பொருள் அற்ற வாதம்

அவர் எடுத்துக் காட்டியிருக்கின்ற மன்னாதி மன்னன், சூராதி சூரன், வில்லாதி வில்லன் ஆகிய மூன்று சொற்களுமே அவருடைய வாதத்துக்குப் பொருந்தாதவைகளாக உள்ளன. மன்னாதி மன்னன், என்றால் பிற மன்னர்களுக்கெல்லாம் அவன் அரசன் என்றும், சூராதி சூரன் என்றால் மற்ற சூரர்களுக்கெல்லாம் அவன் சூரன் என்றும், வில்லாதி வில்லன் என்றால் மற்ற வில்லாளிகளெல்லாரையும் வெல்லும் ஆற்றல் வாய்ந்த வில்லாளி என்றும் பொருள் கொள்ளப்படும். அவ்வாறெனில் கள்வர் கள்வன் என்பதை கள்வர்களையெல் லாம் வெல்லக்கூடிய கள்வன் என்று தானே பொருள்கொள்ள வேண்டும். காலகாலன் என்று ஒரு சொல் உண்டு. அதனை எமனையெல்லாம் நடுங்கச் செய்யும் எமன் என்று தானே பொருள் கூறுகின்றனர். அதேபோன்று கண்டர் கண்டன் என்ற சொல்லுக்கு கண்டர்களை எல்லாம் வென்று அடக்கியவன் என்று தானே வரலாற்றாசிரியர்கள் பொருள் புகலுகின்றனர்.

இராசசேகர தங்கமணி பொருள் கொள்வதைப் போன்று பார்த்தால் சோழசோழன், பாண்டிய பாண்டியன் முத்தரைய முத்தரையன் என்று மற்ற மன்னர்களும் பட்டம் சூட்டிக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு எந்த மன்னனும் பட்டம் சூட்டிக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. மாறாகப் பல்லவர் காவலன், சோழர் காவலன் என்று தங்களை அழைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். பல்லவர் குலத்துக்கு அவன் தலைவன், சிறந்தவன் என்றால் பல்லவர் காவலன் என்றுதான் கூறிக்கொள்வானே தவிர, பல்லவர் பல்லவன் என்று கூறிக்கொள்ளமாட்டான்.

---

42. ம. இராசசேகர தங்கமணி, பாண்டியர் வரலாறு (பாகம் 1) பக். 236,

## களப்பிரர், முத்தரையர்

பாண்டிய மன்னன் கடுங்கோன், பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு ஆகியோர் காலம் முதல் களப்பிரர்கள் பற்றிய ஆதார பூர்வமான குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. முதலாம் நரசிம்மவர்மன் காலத்திய ஒரு கல்வெட்டில் முத்தரையர், அவனுக்கு அடங்கிய சிற்றரசராக அவனது தலைமையை ஏற்றுக் கொண்டவராகக் காணப்படுகின்றனர்.[43] ஆனால் அதே நேரத்தில் நரசிம்மவர்மன் களப்பிரர்களை வென்றதாகச் செப்பேடுகளில் குறிக்கப்படுகிறான்.[44]

அதே போன்று இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லனை காஞ்சிபுரத்தில் பல்லவர்களின் அரியாசனத்தில் அமர்த்துவதற்குத் துணை புரிந்தவர்களிலே காடக முத்தரையன் ஒருவனும் குறிக்கப்படுகிறான்.[45] ஆனால் பட்டத்தாள் மங்கலச் செப்புப் பட்டயத்தில், நந்திவர்மப் பல்லவ மன்னனின் கால்களில் வீழ்ந்து வணங்கும் சமயத்தை எதிர்பாத்திருந்தவர்களில் களப்பிரனும் ஒருவனாகக் குறிக்கப்படுகிறான்.[46]

ஆகவே தொடக்கம் முதல் களப்பிரர்கள் பல்லவர்களுக்கு எதிரிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள். ஆனால் முத்தரையர் ஆரம்ப கால முதல் பல்லவர்களுக்கு உதவுபவர்களாக, சிற்றரசர்களாக இருந்திருக்கின்றனர். இதிலிருந்தே முத்தரையர்களும், களப்பிரர்களும் வெவ்வேறானவர் என்று தெரிந்து கொள்ளலாம்.

மேலும் செந்தலைக் கல்வெட்டில் குறிக்கப்படும் முத்தரைய மன்னர்கள் 'கலி அரைசர்' என்று குறிக்கப்படவில்லை. அதேபோன்று களப்பிரர்களும் களப்பாளர், கள்வர் என்று குறிக்கப்படுகிறார்களே தவிர 'முத்தரையர்' என்று எந்த இடத்திலும் குறிக்கப்படுவதாகக் காணமுடியவில்லை.

---

43. டாக்டர் இரா. நாகசாமி, செங்கம் நடுகற்கள்.

44. பல்லவர் செப்பேடுகள் முப்பது, கூரம் செப்பேடுகள், சுலோகம் 4, வரி 12, பக். 55.

45. S. I. I Vol. IV, No. 135, Section 1.

46. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பட்டத்தாள்மங்கலம் செப்பேடு, சுலோகம் 9. பக். 246.

## கொங்கு நாட்டில் களப்பிரர்

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிவாக்கிலிருந்து களப்பிர மன்னர்கள் சிலரை கொங்குப் பகுதியில் காணமுடிகிறது. இம்மன்னர்கள் இதுநாள்வரை சேர மன்னர்களாக வரலாற்றாசிரியர்களால் கருதப்பட்டு வந்தனர்.[47] மத்திய அரசின் கல்வெட்டிலாக்காவினர் அண்மையில் வெளியிட்டுள்ள ஒரு கல்வெட்டு பொன்னிவாடியைச் சேர்ந்ததாகும். இக்கல்வெட்டின் துணையால் இவர்கள் களப்பிரர்கள் என்று உணரமுடிகிறது.[48]

கோயம்புத்தூர் மாவட்டம் பொன்னிவாடியில் கிடைத்துள்ள இக்கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இக்கல்வெட்டின் வாசகம் கீழ்வருமாறு காணப்படுகிறது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ **சந்த்ராதித்ய குல திலகன்** சா-
2 ர்வ பௌமன் **கலிநிருவ (ப) கள்வனா இன கோ -**
3 **க்கண்டனிரவி** அடியாளாக மணியன் சேகெரி [ந)-
4 ல்லூர்த் தான் வயக்கின நிலத்திற் பள்ளப் போ-
5 ழி (யி) ற் (நெற்) பெட்டுப் போழியின் வடக்கு மணி-
6 யன் வயக்குக்குப் போந்த கவ(ரி)ன் மேக்கு நீர்மிணி வா-
7 ய்க்(கா)லின் கிழக்கு செ(ங்)கந்(தி)டர்காக(க்) கவருபோழி உண்ணா
8 ழிகைப் புறமாக அட்டினேன்
9 மணியன் வய...........[49]

கல்வெட்டில் கோக்கண்டன் இரவி என்னும் மன்னன் "கலிநிருப கள்வனாயின கோக்கண்டன் இரவி" என்று குறிப்பிடப்படுகிறான். இத்தொடர் களப்பிரமன்னன்தான் இவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. 'கலிநிருப' என்னும் சமஸ்கிருதச்

47. K.V. Subrahmanya Ayyar, Historical Sketches of Ancient Dekhan, Vol. II, P. 53

48. Epi. Indica-Vol. XXXVIII, No. 6, P. 39,

49. Ibid.

சொல் 'கலிஅரசன்' என்னும் பொருளைத் தருவதாகும். அத்தோடு கள்வனாயின கோக்கண்டன் இரவி என்றும் குறிக்கப் படுவதால் கலிஅரசன் கள்வன் கோக்கண்டன் இரவி என்று பொருளாகிறது. இது வேள்விக்குடிச் செப்பேட்டில் ஆளப் படும் 'களப்பிரனென்னும் கலிஅரசன்' என்பதில் மாறுபட்ட வடிவமாகவே உள்ளது. வேள்விக்குடிச் செப்பேட்டில் காணப் பெறும் கலிஅரசன் என்பது கல்வெட்டில் கலிநிருப என்றும்; களப்ரனென்னும் சொல் கல்வெட்டில் கள்வன்என்றும் வழங்கப் பெறுகிறது. ஆதலால் களப்ரர்கள் 'கள்வர்' என்றும் அழைக்கப் பட்டனர் என்பது தெளிவாகிறது.

## களவர கள்வனா? கள்வர் கள்வனா?

செந்தலைக் கல்வெட்டில் காணப்படுவதைச், சிலர் குறிப் பிட்டதைப்போல் 'களவர கள்வன்'[50] என்று படிப்பதைக் காட்டிலும் 'கள்வர் கள்வன்' என்று படிப்பதே சாலச்சிறந்தது என்பது இக்கல்வெட்டினால் புலனாகிறது. செந்தலைக் கல்வெட்டிலும் ஒற்றுக்குப் புள்ளியிட்டே காணப்படுகிறது. அத்தோடு வேங்கடமலையை ஆண்டுவந்த புல்லியைக் 'களவர கோமான்' என்று குறிப்பதைவிடக் 'கள்வர் கோமான்' என்று குறிப்பதும் நல்லது.

## சந்திர சூரிய குலம்

பொன்னிவாடிக் கல்வெட்டின் மூலம் கண்டன் இரவி களப்பிர வமிசத்தைச் சேர்ந்தவன் என்பதோடு 'சந்த்ராதித்ய குலத்துக்குத் திலகம் போன்றவன் என்பதும் பெறப்படுகிறது. சோழர்கள் சூரிய குலத்தையும், பாண்டியர்கள் சந்திர குலத்தை யும் சார்ந்தவர்கள் என்று தங்களது செப்பேடுகளில் கூறிக் கொள்வர். அதுபோன்று கண்டன் ரவி 'சந்திர சூரிய குலத்தைச் சேர்ந்தவன்' என்று தெரிவித்துக் கொள்கிறான். கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளலூர் என்னுமிடத்திலிருந்து கிடைத்துள்ள மற்றொரு கல்வெட்டாலும் இம்மன்னன் சந்த்ராதித்ய குலத்தைச் சேர்ந்தவன் என்பதைக் காணலாம்.

50. M. Raghava Iyangar, Journal of Indian History, Vol, VIII.

## வெள்ளலூர்க் கல்வெட்டு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சந்த்ரா
2. தித்ய குல[தி]லக
3. சார்வபௌம(னா)
4. கிய ஸ்ரீ கோக்கண்ட
5. ன் னிரவிக்குச் செ
6. ல்லா நின்ற யாண்டு
7. இருபத்து நான்
8. கு இவ்வாண்டு வெளி
9. லூர்த் தென்னூ
10. ர் நக்கனார் மண்ட
11. பத்துக்கு ஓம
12. (யிந்த்ர) ன்மா கலூ
13. ர்கிழெ(மூா)ன் கண்
14. ணங் காவஅனன்
15. னான் நடுவித்த
16. கற்றூண்[51]

## கோக்கண்டன் இரவியின் முன்னோரும் பின்னோரும்

கோயம்புத்தூர் மாவட்டப் பகுதியில் காணப்பெறும் பிற கல்வெட்டுகளில் குறிக்கப்படும் மன்னர்களில் சேர மன்னர் களைச் சார்ந்ததாகக் குறிக்கப்படுவனவற்றில் இக்கோக்கண் டன் இரவிக்கும் அவர்களுள் ஒரு சிலருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. அத்தோடு அந்த ஒரு சிலரின் கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்தமைதியும் இதற்குத் துணை புரிவதாக உள்ளது.

சில கல்வெட்டுக்கள் கண்டன் வீரநாராயணனுடைய தாகவும்,[52] சில இரவிகண்டனுடையதாகவும்,[53] சில இரவி கோதையின் காலத்தைச் சார்ந்ததாகவும்[54] உள்ளன. இக்

51. Epigraphia Indica vol. XXXIII, p. 41.
52. A. R. E. 147 of 1910.
53. A. R. E. 252 of 1964-65.
54. DAMILICA Vol. I, Page.

கல்வெட்டுக்களின் எழுத்தமைதியும் கோக்கண்டன் இரவியின் கல்வெட்டுக்களின் எழுத்தமைதியும் பெரும்பாலும் ஒற்றுமையாகக் காணப்படுகின்றன. ஆகவே கோக்கண்டன் வீர நாராயணன், இரவிகண்டன், இரவி கோதை ஆகியோர் கண்டன் இரவிக்குச் சற்று முன்பின்னாக ஆட்சி செய்திருக்க வேண்டும் என்று கருதலாம். மேலும் அவர்களின் பெயர்களுக்கும் கோக்கண்டன் இரவியின் பெயருக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கக் கூடும் என்ற எண்ணமேற்படுகிறது.

## அரசர் வரிசை

அந்த அடிப்படையில் பார்த்தால் கண்டன் வீரநாராயணனும், கண்டன் இரவியும் உடன் பிறந்தார்களாக இருக்கலாம். கண்டன் இரவியின் புதல்வர்களாக இரவிகண்டனும், இரவிகோதையும் இருக்கலாம். கண்டன் வீரநாராயணனுக்கும், கண்டன் இரவிக்கும் தந்தையாகக் கண்டன் என்பவன் வாழ்ந்திருக்கலாம். இவர்களுக்குப் பிறகு வரகுண பராந்தகன் என்னும் மன்னன் ஒருவனும் ஆண்டிருக்கிறான். மேலே கொள்ளப்பட்ட கருத்தைப் பட்டியல் வடிவில் கீழே காணலாம்.

கண்டன்
- கண்டன் வீரநாராயணன்
- கண்டன் இரவி
  - இரவி கண்டன்
  - இரவி கோதை
    - வரகுண பராந்தகன்

கண்டன் வீரநாராயணன், கண்டன் இரவி ஆகியோரின் கல்வெட்டுக்கள் எழுத்தமைதியை அடிப்படையாகக் கொண்டு சுமார் கி. பி. 900-ம் ஆக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவ்வாறெனில் அவர்களின் தந்தையான கண்டன் கி. பி. 9-ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஆட்சி புரிந்திருத்தல் கூடும். இரவி கண்டன் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் மைய வாக்கிலும், இரவி கோதை கி. பி. 10-ஆம் நூற்றாண்

டின் இறுதி வாக்கிலும் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். வரகுண பராந்தகனும் பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்திருக்கிறான். அவனது காலத்திய இரண்டு கல்வெட்டுக்கள் கோயம்புத்தூர் மாவட்டம் பிரமியத்திலிருந்து கிடைத்துள்ளன.[55] ஒன்று 15-ஆம் ஆட்சி ஆண்டிலும் மற்றொன்று 22-ஆம் ஆண்டிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவனும் தம்மை **சந்திர சூரிய குலத்தைச் சார்ந்தவன்** என்று கூறிக்கொள்கிறான். பிரமியத்தில் காணப்படும் கல்வெட்டுகளுள் இவனுடைய கல்வெட்டுக்கள்தாம் மிகவும் பழமையானவை என்று கே. வி. சுப்பிரமண்ய அய்யர் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வெட்டுக்கள் காணப்பெறும் இடங்கள்

இவர்களுடைய கல்வெட்டுக்கள் கோவை மாவட்டத்தில் பொன்னிவாடி, வெள்ளலூர், கீரனூர், பழநி, ஈரோடு, பிரமதேசம், பேரூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. ஆகவே கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை களப்பிரர் கோவை மாவட்டத்தில் அதாவது பழைய கொங்கு நாட்டில் ஆண்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. அத்தோடு அவர்களது கல்வெட்டுக்கள் காணப்படும் இடங்களை நோக்கும்போது ஒரு கணிசமான நிலப்பரப்பு அவர்களது ஆளுகையின் கீழிருந்திருக்கிறது என்பதும் தெரிய வருகிறது. களப்பிரர் வைதீக மதத்துக்கு எதிர்ப்பானவர்கள் என்பது தவறானது என்பதும் அவர்களது கல்வெட்டுக்களினால் தெளிவாகிறது. களப்பிரர் சமயம் என்னும் தலைப்பில் இது பற்றி விரிவாகக் காணலாம்.

## தமிழகத்துப் பிற பகுதிகளில் அப்போதைய சூழ்நிலை

கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழகத்தின் வடபகுதியில் பல்லவனான அபராஜிதன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன் தன் செப்பேட்டில் களப்பிரரை வென்றதாகக் கூறிக் கொள்கிறான்.[56] அவன் கூறிக்கொள்வது உண்மையானால் கொங்கு நாட்டில் தன்னாட்சி புரிந்து

55. A. R. E. 208 and 209 of 1920.

56. Dr. R. Nagaswamy; Tiruttani and Velanjeri copper-plates, Velanjery plates of Aparajita, translation, P. III.

கொண்டிருந்த களப்பிர மன்னன் கோக்கண்டனைத்தான் வென்றிருக்க வேண்டும். அவ்வெற்றி நிலைத்த வெற்றியாக இருந்திருக்காது. திரும்பவும் களப்பிரர் தன்னாட்சி புரிய முற்பட்டிருப்பர். ஆதலால்தான் அவர்கள் தங்கள் பெயரிலேயே கல்வெட்டுக்களை எழுதியிருக்கின்றனர்.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சோழ நாட்டில் முத்தரையர்கள் ஆண்டு கொண்டிருந்தனர். முத்தரைய மன்னன் சுவரன் மாறனும் களப்பிரரை வென்றிருத்தல் வேண்டும். ஆதலால்தான் அவன் கள்வர்கள்வன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டுள்ளான். சுவரன் மாறன் காலத்தில் வாழ்ந்த களப்பிரர் கோக்கண்டனுக்கு முன்பாக ஆட்சி புரிந்தவனாக இருத்தல் வேண்டும்.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சோழ மன்னன் ஆதித்யன், பல்லவ மன்னன் அபராஜிதனை வென்று சோழ ராஜ்யத்தையும் பல்லவ நாட்டையும் இணைத்து ஆளத் தொடங்கிவிடுகிறான். இவன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச்சென்று அதனைக் கைப்பற்றிக் கொண்டான் என்று கொங்கு தேச ராசாக்கள் என்ற வரலாற்று நூல் கூறுகிறது. அந்நூலில் 'சோழ வம்சத்திலே விசயாட்ராயன் மகன் ஆதித் தவர்மராயன் சோழ தேசம் தஞ்சாவூரிலே பட்டம் கட்டிக் கொண்டு கொங்க தேசத்துக்கு வந்து ராசா வேடர்களைச் செயம் பண்ணித் தலைக்காடு என்ற பட்டணங்கட்டிக் கொண்டு இந்த இராச்சியங்களிலேயே அநேக அக்கிரிகாரம் சர்வமானியமாய்த் தருமம் பண்ணி அந்த அரசை ஆண்டனன்' என்று குறிக்கப்பட்டுள்ளது.[57]

கொங்கு நாட்டில் அப்பொழுது வேடராசாக்கள் ஆண்டு வந்ததாக கொங்கு தேச ராசாக்கள் என்ற நூல் குறிப்பிடுவது களப்பிரரைத்தான் என்று கருதலாம். கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கண்டன் கொங்கு நாட்டை ஆண்டிருக்கிறான் என்பதை முன்னரே கூறினோம். அவனைத் தான் ஆதித்யனும் வென்றிருக்கவேண்டும். பல்லவ

57. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, தொகுதி-I.

மன்னன் அபராஜிதனுக்காக ஆதித்யன் களப்பிரனை வென்றிருக்கலாம். ஆதலால்தான் அபராஜிதன் தான் களப்பிரனை வென்றதாகக் கூறிக்கொள்ள, ஆதித்யன் கல்வெட்டுகள் ஏதும் கொங்கு நாட்டில் அவன் படையெடுத்துச் சென்றதைக் கூறாமல் இருக்கின்றன என்று யூகிக்க இடம் ஏற்படுகிறது.

எவ்வாறிருப்பினும் ஆதித்யன் களப்பிரனாகிய கண்டனைத் தோற்கடித்திருக்கிறான். அதன் காரணமாகத்தான் "பல்யானை கோக்கண்டன்" என்ற பட்டப்பெயரை ஆதித்தனுக்குத் திருநெய்த்தானம் கல்வெட்டில்[58] காணமுடிகிறது போலும். ஆனாலும் அவ்வெற்றி நிலைத்த வெற்றியல்ல என்பதைக் கோக்கண்டனின் புதல்வர்கள் சுயேச்சையாகக் கல்வெட்டுகள் பொறித்திருப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். இதன்மூலம் சோழர் வரலாற்றிலிருந்து ஒரு புதிர் நீங்கி விடுகிறது.

கொங்கு நாட்டிலிருந்து பொன் கொண்டுவந்து தில்லைச் சிற்றம்பலத்துக்கு ஆதித்யன் பொன் வேய்ந்தான் என்று திருத்தொண்டர் திருவந்தாதி கூறுகிறது.[59] ஆனால் இவன் கொங்கு நாட்டுக்குப் படையெடுத்துச் சென்றான் என்ற செய்தி கொங்குதேச இராசாக்கள் என்ற பிற்கால நூலில் தவிர, இவனது செப்புப் பட்டயங்களிலோ, கல்வெட்டுகளிலோ காணமுடியவில்லை. அதேபோன்று பராந்தகனுடைய கல்வெட்டுக்கள் சில கொங்கு நாட்டில் காணப்பட்டாலும் பராந்தகன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் சென்றதற்கான எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை. இவ்விரண்டு செயல்களும் பெரும் புதிராகவே வரலாற்றாசிரியர்களுக்கு இருந்து வந்தது.

ஆதித்யன் கொங்கு நாட்டுக்குப் படையெடுத்துச் சென்றிருக்கிறான்; ஆனால் பல்லவ மன்னன் அபராஜிதனுக்காகச் சென்று களப்பிரரைத் தோற்கடித்திருக்கிறான் என்று கருதுவோமானால் இப்போதைக்கு ஒரு தீர்வு கண்டவர்கள்

58. A. R. E. 286 of 1911. SII. III, No. 89, P. 221.

59. திருத்தொண்டர் திருவந்தாதி பாடல் 65.

ஆகிறோம். வேலஞ்சேரி செப்பேட்டில் அபராஜிதன் "களப்பிரர் என்ற ஆகாயத்தில் உலவும் சூரியனாகத் திகழ்ந்தான்" என்று கூறப்படுவதிலிருந்து களப்பிரரை அபராஜிதன் வென்றிருப்பது நிரூபணமாகிறது. அபராஜிதனை ஆதித்யன் வென்றபிறகு அபராஜிதனால் வெல்லப்பட்ட பகுதிகளும் ஆதித்யனின் ஆட்சியின்கீழ் சேர்ந்துவிடுவது இயற்கைதானே. ஆதலால்தான் பராந்தக சோழன் காலத்திலும் அப்பகுதி சோழர்கள் வசம் இருந்திருக்கிறது. சோழர்கள் வசம் இருந்தபோதிலும் களப்பிர மன்னர்கள் அங்கு சுய ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதையும் மறுக்க இயலாது.

## கொங்குச் சோழர்களா? கோநாட்டு மன்னர்களா?

கொங்குப் பகுதியில் கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டு வாக்கில் இரு பெரும் மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அவர்களை வரலாற்றாசிரியர்கள் **கொங்குச் சோழர்** என்று குறிப்பிடுவர். ஆனால் கே. வி. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள், அவர்களைக் 'கோனாட்டு மன்னர்கள்' என்று அழைப்பதே பொருத்தமானது என்று வலியுறுத்தியுள்ளார்கள்.[60] அம்மன்னர்கள் தங்களைக் கோநாட்டைச் சேர்ந்தவர்கள் என்றுதான் கூறிக்கொள்கின்றனர். ஆகவே அவர்கள் கோனாட்டிலிருந்து வந்து கொங்கு நாட்டை ஆண்டவர்கள் என்று கொள்வதே சாலப் பொருத்தமாகும். அவர்களின் பெயர்கள் (1) வீர சோழ கலிமூர்க்கன் (2) கலிமூர்க்க விக்ரமசோழன் என்பதாகும். வீரசோழ கலிமூர்க்கன் தந்தையாகவும், கலிமூர்க்க விக்ரம சோழன் அவனது மகனாகவும் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[61]

## இருக்குவேளிரா? முத்தரையரா?

இவர்கள் கோநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கண்டோம். கோநாட்டில் இருக்குவேளிர்கள் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்களின் வழி

60. Historical sketches of Ancient Dekhan, Vol. II, Page. 61.

61. நடன. காசிநாதன், 'யார் இந்த கலிமூர்க்கன்', கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு (நூல் வெளிவரவில்லை).

வந்தவர்கள் இவர்கள் என்றால், இருக்குவேளிர் மன்னர்களில் யாருக்கும் கலிமூர்க்கன் என்ற பட்டம் இருந்ததாகச் சான்று கிடைக்கவில்லை. கோநாட்டில் இருந்த மற்றொரு இனம் முத்தரையர் ஆவார். கோநாடடைச் சேர்ந்த திருமயத்தில் தான் முத்தரையர்களின் மிகப் பழமையான கல்வெட்டு கிடைத்துள்ளது. விடேல் விடுகு விழுப்பேரதி அரைசன் என்னும் சாத்தன் மாறனின் தாய் பெரும்பிடுகு பெருநதேவி என்பாள் திருமயம் சத்யகிரிநாதப் பெருமாள் கோயிலைப் புதுப்பித்ததைத் தெரிவிக்கிறது[62] சாத்தன் மாறன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தைச் சார்ந்தவனாக இருககலாம் என்று கருதப்படுகிறது[63] அடுத்து குவாவன் சாத்தனின் கல்வெட்டு புதுக்கோட்டை மாவட்டம் மலையடிப்பட்டியில் கிடைத்திருக்கிறது. இவன் பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தில் திருவாலத்தூர் மலையைக் குடைந்து கோயில் அமைத்து பிடாரரை பிரதிஷ்டை செய்ததை அக் கல்வெட்டு புலப்படுத்துகிறது.[64] இவன் வழி வந்த சாத்தம்பூதி, சாத்தம்பழியிலி, பூதிகளரி போன்றோர்கள் இப்பகுதியிலேயே ஆண்டு வந்திருக்கிறார்கள். இங்கு பல கோயில்களையும் எடுப்பித்திருக்கிறார்கள்.

மேலும் பல்லவ மன்னன் தந்திவர்மன் காலத்தில் மாற்பிடுவனார் என்னும் பேரதியரையனின் அடியான் ஒருவன் வாலி வடுகன் என்னும் கலிமூர்க்க இளவரையன் என்ற பெயரோடு திகழ்ந்திருக்கிறான். அவன் குன்னாண்டார் கோயிலில் வாலி ஏரி என்று ஒரு ஏரியை அமைத்திருக்கிறான்.[65] மாற்பிடுவனார் பேரதியரையன் முத்தரைய மன்னனாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.[66] முத்தரையர்கள் 'பேரதியரையர்' என்றும் 'இளவரையர்' என்றும் பட்டம் பூண்டிருக்கின்றனர். அடியானான வாலிவடுகன், கலிமூர்க்க இளவரையன் என்றும் பெயர் பெற்றிருப்பதால் மாற்பிடுவனார் பேரதியரையனுக்கோ அல்லது அவனது முன்னோனுக்கோ கலிமூர்க்கன் என்று ஒரு பட்டப் பெயர் இருந்திருக்கலாம். சோழர் காலத்தில் மன்னர்

62. I. P. S. No. 13.
63. நடன. காசிநாதன், முத்தரையர்.
64. I. P. S. No. 18.
65. Ibid No. 17
66. K. V. Subramanya Iyer: Historical sketches of Ancient Dekhan

களது பெயரைக்குறுநில மன்னர்களும், அரசியல் அதிகாரிகளும் பெற்றிருந்ததை நிரம்பக் காணமுடியும். அதே போன்று பல்லவர்களின் மாற்பிடுகு, விடேல்விடுகு போன்ற பட்டப் பெயர்களை அவர்களது குறுநில மன்னர்கள் தாங்கியிருந்ததையும் காணமுடிகிறது. ஆதலால் முத்தரைய மன்னன் ஒருவன் நந்திவர்மப் பல்லவன் காலத்தில் 'கலிமூர்க்கன்' என்ற பட்டப் பெயரைக் கொண்டிருந்தான் என்று கருத இடமேற்படுகிறது. அம்மன்னன் பெரும்பாலும் குவாவன் சாத்தனாக இருக்கலாம். ஆகவே அந்த முத்தரையர் குலத்தைச் சார்ந்தவர்களாகக் கொங்கு நாட்டை ஆட்சி செய்த வீரசோழ கலிமூர்க்கனும் கலிமூர்க்க விக்கிரம சோழனும் இருக்கலாம்.

## கலிமூர்க்கன் என்ற பட்டம் எவ்வாறு வந்தது?

பல்லவ மன்னர்களிடம் முத்தரையர்கள் நேசமாகவே இருந்து வந்தனர். ஆதலால்தான் இரண்டாம் நந்திவர்மப் பல்லவ மல்லன் காலத்தில் குவாவன் என்னும் முத்தரையன் சமணப் பள்ளிக்குக் கொடையளித்ததைக் குறிக்கும் கல்வெட்டில் நந்திவர்மனின் ஆட்சியாண்டைக் காணமுடிகிறது. அதே போன்று தந்திவர்மனின் காலத்தில்தான் குவாவன் சாத்தன் மலையடிப் பட்டியில் குடைவரைக் கோயிலை அமைத்திருக்கிறான். மேலும் நிருபதுங்கவர்மன் காலத்தில்தான் சாத்தம்பழியிலி நார்த்தாமலையில் பழியிலீச்சுரம் என்னும் குடைவரைக் கோயிலைக் குடைவித்திருக்கிறான். ஆகவே முத்தரையர்கள் பல்லவ மன்னர்களுக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்திருக்கின்றனர் என்பது தெளிவு.

ஆனால் களப்பிரர் பல்லவர்களுக்குத் தீராப் பகைவர்களாக இருந்திருக்கின்றனர். சிம்மவிஷ்ணு காலம் தொட்டு அபராஜிதன் காலம்வரை பெரும்பாலான பல்லவ மன்னர்கள் களப்பிரரை வென்றதைச் செப்புப்பட்டயங்கள் பறைசாற்றும்.

செந்தலைக் கல்வெட்டில் காணப்படும் முத்தரைய மன்னன் சுவரன் மாறன் கள்வர் கள்வன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான் என்பதை முன்னரே கண்டோம். அது போன்று மற்றொரு முத்தரையன் 'கலிமூர்க்கன்' என்ற

பட்டத்தைப் பெற்றிருக்கலாம். களப்பிரர்கள் கலி அரசர்கள். அவர்களைச் சின்னாபின்னமாகச் செய்துவிட்டான் என்பதைக் 'கலிமூர்க்கன்' என்ற பட்டப் பெயரால் தெரிவிக்க அம்மன்னன் நினைத்திருக்கலாம். ஆகவே களப்பிரரை வென்றதைக் குறிப்பதற்காகக் 'கலிமூர்க்கன்' என்ற பட்டப் பெயர் வழங்கியிருக்கலாம்.

## நாயன்மார்களில் ஒருவர் மூர்க்கர்

சைவ மதத்தைப் பரப்பி வந்த அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர் மூர்க்கர் என்று பெயர் பெற்றிருந்தார். அவர் தொண்டை நாட்டிலே திருவேற்காட்டில் வேளாண் குடியில் பிறந்தவர். அடியார்களுக்கு உணவு அளித்து மகிழ்வதில் பெரு விருப்பு கொண்டவர். அவரிடம் இருந்த செல்வம் எல்லாம் அழிந்த பின்னர், தம் சூதாடும் திறமையால் பொருள் ஈட்டி அடியார்களுக்கு அமுதிடும் பணியைத் தொடர்ந்து நடத்தலானார். இறைவன் திருவிளையாடலால் சூதாட்டத்திலும் தோல்வி ஏற்பட ஆரம்பித்தது. இருப்பினும் மனம் தளராமல் சூதாடி இறுதியில் வெற்றி பெற்று வந்தார். எதிராளிகள் அவருடன் தகராறு செய்யத் தொடங்கினர். அடியாரோ சிறிதும் மனம் தளராமல் எதிராளிகளைத் தம் உடைவாளால் குத்திப் பணியச் செய்தார். இதனால் அவருக்கு மூர்க்கர் என்ற பெயர் ஏற்படலாயிற்று என்று அறிய முடிகிறது.[67] அதே போன்று களப்பிரர்களைக் கொஞ்சமும் தயக்கமின்றிப் போரிலே தம் வாளால் குத்தித் தோற்கடித்ததால் முத்தரைய மன்னன் ஒருவனுக்கு 'கலிமூர்க்கர்' என்ற பட்டம் ஏற்பட்டிருக்கலாம்.

## நில இயல்பு கூறும் உண்மை

கொங்கு நாட்டுக்குக் கிழக்கே அணித்தாக உள்ள நிலப்பரப்பு கோநாடு ஆகும். ஆகவே கோநாட்டார் கொங்கு நாட்டாரோடு போரிடுவது தவிர்க்கமுடியாததாக இருந்திருக்கும். காரணம் ஒவ்வொரு மன்னனும் பண்டைக் காலத்தில் தம் அண்டை நாட்டாரோடு அடிக்கடி சண்டையிட்டுத் தம்

67. பெரிய புராணம், மூர்க்கர் நாயனார் புராணம்.

ஆட்சிப் பரப்பை அகலப்படுத்த எண்ணிய எண்ணம்தானாகும். பல்லவமன்னன் அபராஜிதனுக்காகச் சோழ மன்னன் ஆதித்யன் கொங்கு நாட்டை ஆண்ட களப்பிரர்களோடு போரிட்டிருக்கிறான். கொங்கு நாடு பின்னர் சோழர் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. நாளடைவில் கொங்கு நாட்டை ஆளும் உரிமையைக் கோநாட்டாராகிய முத்தரையருக்குச் சோழமன்னன் தந்திருக்கலாம். அவ்வாறு ஆளத் தொடங்கியவர்கள்தான் கோநாட்டு மன்னர்கள் என்று கருதலாம்.

## வீர சோழ கலிமூர்க்கன் (கி. பி. 967-1005)

இவனது காலத்தது என்று இதுவரை நான்கு கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டம் கொடுவாயிலிருந்து ஒரு கல்வெட்டும்[68] பிரமியத்திலிருந்து இரு கல்வெட்டுகளும்[69] வள்ளி எறிச்சலிலிருந்து ஒருகல்வெட்டும்[70] ஆகும். கொடுவாய்க் கல்வெட்டு இவனது 14-ஆம் ஆட்சி ஆண்டிலும், பிரமியம் கல்வெட்டுகள் 17, 24- ஆம் ஆட்சி ஆண்டுகளிலும், வள்ளி எறிச்சல் கல்வெட்டு 38-ஆம் ஆண்டிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவனுக்குப் பின் ஆட்சி புரிந்த - பெரும்பாலும் இவனது மகன் என்று கருதப்படுகிற - கோக்கலிமூர்க்க விக்கிரமசோழனின் 40-ஆம் ஆட்சிஆண்டுக் கல்வெட்டு சக ஆண்டு 967 உடன் திங்களூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கோக்கலிமூர்க்க விக்கிரமசோழன் கி.பி. 1005-ல் ஆட்சி புரியத் தொடங்கியிருக்கவேண்டும். அவ்வாறெனில், கோ வீரசோழ கலிமூர்க்கன் 38 ஆண்டுகளே ஆண்டுள்ளதாகத் தெரிவதால் கி. பி. 967-ல் ஆட்சி புரியத் தொடங்கியிருத்தல் கூடும்.

வீரசோழன் என்பது சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் பட்டப் பெயராகும். அவன் கி.பி. 907 முதல் 955 வரை சோழ நாட்டை ஆட்சி புரிந்திருக்கிறான். அவனது கல்வெட்டுக்கள் தமிழ்நாடு பூராவும் காணப்படுகின்றன. கொங்கு நாட்டிலும் அவனது கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

68. A. R. E. 111 of 1920.
69. Ibid 189, 204 of 1920.
70. Damilica Vol. I, Page.

பராந்தகனது ஆட்சிக் காலத்தில் கொங்கு நாடு அவனது ஆளுகையின் கீழ்தான் இருந்தது என்றாலும் களப்பிர மன்னனும் அங்கு தமது கல்வெட்டுக்களைச் சுயேச்சையாகப் பொறித்துள்ளதைக் காணமுடிகிறது. பராந்தகன் ஆட்சிக் காலத்துக்குப் பிறகு சுமார் 12 ஆண்டுகள் கழித்து கோநாட்டானாகிய வீர சோழ கலிமூர்க்கன் கொங்கு நாட்டை ஆளத் தொடங்கியிருக்கிறான். அவனது பெயர் அவன் பராந்தகச் சோழனுக்கு அடங்கியவனாகக் கோநாட்டில் இருந்தவன் என்பதையும், பின்னர், தான் கொங்கு நாட்டை ஆளும் வாய்ப்பைப் பெற்றான் என்பதையும் தெளிவாக உணர்த்துகிறது.

## கலிமூர்க்க விக்கிரம சோழன் (கி.பி. 1005-1047)

இவன் கொங்கு நாட்டைச் சிறந்த முறையில் நெடுங்காலம் ஆட்சி புரிந்திருக்கிறான். இவனது கல்வெட்டுக்கள் இவனின் 2-ஆம் ஆட்சி ஆண்டிலிருந்து 42-ஆம் ஆட்சி ஆண்டு வரை கிடைத்திருக்கின்றன. இவனுடைய கல்வெட்டுக்கள் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதுமின்றி, மதுரை மாவட்டம், பழநி தாலுக்காவிலும் கிடைக்கின்றன. பேரூர், வெள்ளலூர், போளுமாம்பட்டி, திங்களூர், விஜயமங்கலம், திருமுருகன் பூண்டி, கண்ணாடிப்புத்தூர், குமாரமங்கலம், சோழமாதேவி, தாராபுரம், கீரனூர், பெரியகோட்டை, களந்தை, சமத்தூர் அண்ணூர், கோவில்பாளையம், பிரமியம் ஆகிய ஊர்களில் அக்கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

மேலே காட்டப்பட்டுள்ளவாறு இவன் கி.பி. 1005 முதல் அரசாளத் தொடங்கி கி.பி. 1047 வரை ஆட்சி புரிந்திருக்கிறான். அக்காலத்தில் கொங்கு நாட்டில் இருந்த முக்கியமான ஆலயங்களில் எல்லாம் இவனது கல்வெட்டுக்களைக் காணமுடிகிறது. இவனுக்கென ஒரு மெய்க்கீர்த்தி இருந்தது என்பது இவனது கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகிறது.

செங்கோலோச்சி வெள்ளி வெண்குடை மிளிரவேந்தி
நாடு வளம்படுத்து நைய குடி ஓம்பி
ஆறில் ஒன்று கொண்டு அல்லவை கடிந்து
கோவீற்றிருந்து குடி புறங்காத்து
பெற்ற குழவிக்குற்ற நற்றாய் போல்
திருமிகு சிறப்பிற் செல்லா நின்ற திரு நல்லியாண்டு

பிரமியத்தில் காணப்பெறும் இவனது கல்வெட்டுக்களி லிருந்து கோநாட்டு மன்னர்களுக்கும் சோழ மன்னர்களுக்கும் இருந்த திருமண உறவுபோன்ற செய்திகளை அறியமுடிகிறது. ஒரு கல்வெட்டு 'நம்பிராட்டியார் வளவன் மாதேவியார் என்னும் இட்டி மூத்தர்' அளித்த தானம் பற்றிக் குறிப்பிடு கிறது. இவள் பெரும்பாலும் கலிமூர்க்க விக்கிரமசோழனின் பட்டத்தரசியாக இருக்கவேண்டும். ஆதலால் 'நம்பிராட்டியார்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'வளவன் மாதேவியார்' என்பது சோழ இளவரசி என்பதைக் காட்டும்.

மற்றொரு கல்வெட்டு, கலிமூர்க்க விக்கிரம சோழன் தன் மகள் இறந்தபோது அவளது ஆத்மா சாந்தி பெறும் பொருட்டு அளித்த தானம் பற்றி தெரிவிக்கிறது. அதில் அவள் சோழ மன்னன் விக்கிரம சோழனின் பட்டத்தரசி என்று காணப் படுகிறது. சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரனுக்கு விக்கிரம சோழன் என்ற ஒரு பெயரும் உண்டு.[71] ஆதலால் முதல் இராஜேந்திரனுக்குத் தன் மகளைக் கலிமூர்க்க விக்கிம சோழன் தந்திருக்கிறான் என்பது இதனால் புலப்படுகிறது.

71. Tiruvalangadu copper Plate A.R.E; 1906, Part-II para 18.

# பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் களப்பிரர்

*கி.பி. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து செல்வாக்குப் பெறத் தொடங்கிய களப்பிரர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு வரை தம் ஆட்சியின் எல்லைப் பரப்பை அகலப்படுத்திக் கொண்டிருந் திருக்கிறார்கள். தென்பகுதியில் பாண்டிய மன்னன் கடுங் கோனும் வடபகுதியில் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவும் அவர்களது அளவற்ற வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்தினர். சோழநாட்டுப் பகுதியில் எந்தவித எதிர்ப்புமின்றி நிலை பெற்றிருந்த களப்பிரர் பாண்டியர், பல்லவர் ஆதிக்கம் சோழநாட்டின் மீது மாறி மாறி ஏற்படத் தொடங்கியதும் வேறு வழியின்றி கொங்குநாட்டுப் பகுதியில் குடிபெயரத் தொடங்கினர். கி.பி. 10-ஆம் நூற்றாண்டுவரை அப்பகுதியில் ஒரு சிறு பகுதியைத் தாங்கள் முழுச் சுதந்திரத்தோடு ஆண்டு வந்திருக்கின்றனர். கொங்குநாட்டின்மீது பிற்காலச் சோழரின் ஆதிக்கம் பரவத் தொடங்கியதும் களப்பிரர் செல்வாக்கு முழுமையாகக் குறைந்தது. கி.பி. 12 - 13ஆம் நூற்றாண்டளவில் சிலர் அரசு அதிகாரிகளாகவும், ஊர்த்தலைவர் களாகவும் இருந்திருக்கிறார்கள்.*

## முதலாம் இராஜராஜன் காலம்

*இடையள நாட்டுச் சிறிஞோர் என்ற ஊரில் அவ்வூர்த் தலைவனாக இருந்த* **களப்பாளன் தன்னிச்சையும்,** *பெரும் புலியூரைச் சார்ந்த ஐயாறன் அம்பலத்தாடியும் திருமறைக் காட்டு புவனிவிடங்க தேவர் கோயிலில் இரண்டு நுந்தா விளக்கு எரிப்பதற்காக, நூற்றெண்பது ஆடுகளை வழங்கி யிருக்கிறார்கள். களப்பாளன் தன்னிச்சை* **"சிறிஞோர் கிழவன்"** *என்று கல்வெட்டில்[72] குறிக்கப்படுவதால் சிறிஞோரின் தலைவ னாக அவன் இருந்திருத்தல் வேண்டும் என்பதை ஊகிக்க லாம். இக்கல்வெட்டு முதலாம் இராஜராஜனின் காலத்தில் (கி. பி. 1000) பொறிக்கப்பட்டிருத்தலால் பெருமன்னன்*

---

72. S. I. I. Vol. XVII, No. 509.

இராஜராஜன் காலத்தில் களப்பிரர்கள் அரச பரம்பரை என்ற நிலையிருந்து தாழ்ந்து கிராமத் தலைவர்கள் என்ற முறையில் திகழ்ந்திருக்கிறார்கள் என்று உணரலாம்.

## முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில்

எய்தலூர் என்னும் ஊரைச் சார்ந்த **களப்பாளன் செல்லையன் தொண்ணம்பி** என்பான் தம் மனைவி உமைநங்கையின் நன்மைக்காகக் கங்கைகொண்ட சோழ வளநாட்டுப்பட்டான் பாக்கைநாட்டு சோழகுலவல்லி நல்லூரில் உள்ள திருக்கண்ணீஸ்வரமுடைய மாதேவற்கு நுந்தா விளக்கு எரிப்பதற்காகக் கொடை அளித்திருக்கிறான். இந்நிகழ்ச்சி முதலாம் குலோத்துங்கச் சோழனின் காலத்தில் (கி. பி. 1092) நடைபெற்றிருக்கிறது.[73]

இம்மன்னன் ஆட்சிக் காலத்திலேயே (கி. பி. 1905) மற்றொரு களப்பாளனின் மகள் தியாகவல்லி வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருமழபாடி உடைய மகாதேவர்க்கு நுந்தாவிளக்கு அமைத்ததும் தெரியவருகிறது. இக்களப்பாளன் இராஜேந்திர சோழ வளநாட்டு வண்டாழைக் கூற்றத்துச் சிற்றாமூர் என்னும் ஊரைச் சார்ந்தவன். இவனைக் கல்வெட்டு **'சிற்றாமூர் உடையான் பெருமான் கற்பகமான களப்பாளராஜர்'** என்று குறிப்பிடுகிறது.[74] 'உடையான்' என்று வருவதால் இவன் தமக்குச் சொந்தக் காணி உடையவனாக இருந்திருத்தல் வேண்டும். அவ்வாறெனில் ஓரளவுக்குச் செல்வம் நிரம்பியவனாகத் திகழ்ந்திருக்கிறான் என்று கருதலாம்.

## இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலம்

சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் (கி. பி. 1133-1150) களப்பாளன் ஒருவன் அரசு அதிகாரியாக இருந்திருக்கிறான். அவனது பெயர் **கங்கை கொண்ட சோழன் களப்பாளன்** ஆகும். அரசனால் வரி நீக்கப்பட்டு அளிக்கப்படும் நிலங்கள் சப்பந்தப்பட்ட தானங்

73. S. I. I. Vol. XVII, No. 164.
74. S. I. I. Vol. V. No. 640.

களில் இவனது கையெழுத்தும் இன்றியமையாததாகக் கருதப் பட்டிருக்கிறது.[75] எனவே இவன் வருவாய்த்துறையைச் சேர்ந்த அதிகாரியாக விளங்கியிருக்கலாம்.

## களப்பாளரராயர் நெற்குன்றங்கிழார்

ஏறக்குறைய இதே காலத்தில் தொண்டை நாட்டில் நெற்குன்றம் என்ற ஊரில் களப்பாளன் ஒருவன் வாழ்ந்திருக் கிறான். இவன் 'நெற்குன்றம் கிழான்' என்று குறிக்கப்படுவ திலிருந்து அவ்வூருக்குத் தலைவனாக விளங்கியிருக்கவேண்டும். இவன் சிறந்த கவிஞனாகவும் திகழ்ந்திருக்கிறான். தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்புகலூர் இறைவன் மீது 'திருப்புகலூர் அந்தாதி' என்னும் நூலை யாத்திருக்கிறான். அவ்வந்தாதியின் இறுதியில் 'களப்பாளன் நெற்குன்றவாணன் அந்தாதிக் கலித்துறையே' என்று எழுதி அதைப் பாடினவன் நெற்குன்ற வாணன் என்பதைப் புலப்படுத்தியுள்ளான்.

## களப்பாள ராசன் சாலை

இவன் தனது பெயரால் திருப்புகலூரில் ஒரு சாலை அமைத்து அதில் பிராமணர்களுக்கு உணவு அளிப்பதற்காகச் சாலைப்புறமாக இறையிலி நிலம் அளித்திருக்கிறான் என்ற செய்தி திருப்புகலூர்க் கல்வெட்டினால் தெரியவருகிறது.[76]

## அச்சுதகளப்பாளன்

இவன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து ஆட்சி புரிந்த களப்பிரமன்னன் அச்சுத விக்கிராந்தனின்றும் வேறுபட்டவன். இவன் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்து வந்த சாதாரண குடிமகன். சிவதத்துவ விளக்க நூலான் சிவஞானபோதம் என்ற நூலின் ஆசிரியரான மெய்கண்டார் இவனது அருமை மகனாவார்.

---

75. S. I. I. Vol. VII. No. 460, 461; S. I. I. Vol. XVII, No. 136.
76. Ep. Ind. Vol. No. 31.

## இரண்டாம் இராஜாதி இராஜன், மூன்றாம் குலோத்துங்கன் காலங்கள்

இம்மன்னர்கள் காலங்களில் இவர்களால் வரிவிலக்கு செய்யப்பட்டு அளிக்கப்படும் நிலக் கொடைகளில் விழுப்பாதிராயர், நுளம்பாதிராயர், பாண்டியாதிராயர், பல்லவராயர் போன்ற அதிகாரிகளோடு களப்பாளராயர் என்பாரும் கையொப்பமிட்டிருக்கிறார். ஆகவே களப்பாளராயர் என்பவர் இம்மன்னர்களின் காலத்தில் சோழ அரசு அதிகாரியாக விளங்கியிருக்கிறார் என்பது உண்மை. இவர் வருவாய்த்துறையைச் சார்ந்த அதிகாரியாக இருந்திருத்தல் வேண்டும். ஆதலால் தான் நிலக்கொடை அளிக்கையில் இவரது கையொப்பமும் தேவையாக இருந்திருக்கிறது. தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் நடராஜர் கோயில் இரண்டாம் பிரகாரத்தின் மேற்குச் சுவரில் எழுதப் பட்டிருக்கும் ஒரு கல்வெட்டில், கேரள ராஜன் என்பவன் நடராஜர் கோயிலுக்கு நிலக்கொடை அளிப்பதை அரசன் அனுமதித்த செய்தியும் அவ்வனுமதிப்புப் பத்திரத்தில் விழுப்பாதிராயர், நுளம்பாதிராயர், பாண்டியாதிராயர், களப்பாளராயர், நந்தியராஜர், ராஜவல்லப பல்லவராயர், வயிராதிராயர் ஆகியோர் கையெழுத்திட்ட செய்தியும் காணப்படுகிறது.[77]

களப்பாளராயன் என்னும் இவ்வதிகாரி எந்தெந்த நிலங்கள் யார் யாருக்குச் சேரவேண்டும் என்று வரையறுக்கும் பெறும் பொறுப்பிலும் இருந்திருக்கிறான் என்பது மற்றொரு கல்வெட்டால் புலனாகிறது.[78]

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர், மகாலிங்கசுவாமி கோயில் இரண்டாம் பிரகாரத் தெற்கு மதிலில் எழுதப்பட்டிருக்கும் அக்கல்வெட்டில் காணப்பெறும் கீழ்வரும் பகுதி களப்பாளராயனின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

---

77. S. I. I. Vol. III. No. 86.
78. S. I. I. Vol. V. No. 708.

> "இந்நிலம் உட்பட நிலம் பதினேழுரையே நாலுமாக்காணி
> யும் பதினெட்டாவது முதல் இத்தேவர்க்கு திருநாமத்
> துக்காணியும் தேவதான இறையிலியுமாய்
> நிற்க கடவதாக பெறவேணுமென்று களப்பாள
> ராயன் நமக்குச் சொன்னமையில் இப்படி
> செய்யக் கடவதாக சொல்லி கணக்கிலும்
> இட்டுக் கொள்ளக் கடவர்களாக வரிக்குக்
> கூறு செய்வார்களுக்கும் சொன்னோம்."

பதினேழுரையே நாலுமாக்காணி நிலம் திருநாமத்துக் காணியாகவும், தேவதான இறையிலியாகவும் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமிக்குச் சேரவேண்டும் என்பதைக் **களப்பாள ராயன்** என்ற அதிகாரி அரசனிடம் கூறியதன் பேரில் அரசன் அவ்வாறே செய்வதற்கு ஆணைப்பிறப்பித்து அதனைக்கணக்கில் குறித்துக் கொள்ளும்படி நில வரி நிர்ணயிக்கும் அதிகாரி களிடம் தெரிவித்திருக்கிறான். ஆகவே களப்பாளராயன் என்ற அதிகாரி மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் பெரும் பொறுப் புடைய அதிகாரியாக விளங்கி வந்திருக்கிறான்.

### சேக்கிழான் பாலறாவாயன் களப்பாளராயன்

இவன் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் பெருமானின் தம்பி. தஞ்சை மாவட்டம், மன்னார்குடி வட்டத் திலுள்ள கோட்டூரில் காணப்படும் கல்வெட்டு, இவன் குன்றத் தூர் நாட்டு குன்றத்தூரைச் சேர்ந்தவன் என்று தெரிவிக்கிறது.[79] மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கோட்டூர் மூலஸ்தானமுடையார் கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்காக பொன் அளித்திருக்கிறான். இவனே மூன்றாம் இராஜராஜன் காலத்தில் திருஅறத்துறை என்னும் ஊரிலுள்ள கோயிலில் ஞானசம்பந்தர் சிவபெருமானிடமிருந்து முத்துப் பல்லக்கு பெறும் விழாவைக் கொண்டாடும் பொருட்டு நிலக்கொடை அளித்திருக்கிறான்.[80]

79. Journal of the Madras University Vol. L1, No. 1. The Kalabhras in the Pandya country by M. Arunachalam, Page. 59.

80. S. I. I. Vol. XVII, No. 600, 602.

## மூன்றாம் இராஜேந்திரன் காலம்

சுத்தமல்லி வளநாட்டு, பாம்புணி கூற்றத்தில் இருந்த சிறுநாங்கூரைச் சேர்ந்த **அழகப்பெருமாளான களப்பாளராயனும்** பாண்டி குலாசினி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து திருவிடைமருதைச் சேர்ந்த விசையபாலனும் திருவாரூரில், ராஜாக்கள் தம்பிரான் சன்னதித் திருவீதியின் தெற்குப் பக்கத்தில் அழகிய திருச்சிற்றம்பலமுடையாரையும், பொற்பதிக்கு நாயக ஈஸ்வரமுடையாரையும் எழுந்தருளிவித்ததையும் அக்கோயில்களில் பூஜை சிறப்புற நடப்பதற்காகக் கொடை அளித்ததையும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. இந்த கல்வெட்டு மூன்றாம் இராஜேந்திரன் காலத்தில் திருவாரூர் தியாகராாசசுவாமி கோயில் பிரகார மேற்குச் சுவரில் எழுதப்பட்டு, இன்றும் நல்ல நிலையில் உள்ளது.

மேலே கூறப்பெற்றுள்ள கல்வெட்டில் 'அரையன் அழகப் பெருமாளான களப்பாளராயன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் அவன் குறுநிலத் தலைவனாக இருந்திருத்தல் கூடும். குறுநிலத் தலைவனாக இருந்த காரணத்தினால் தான் 'களப்பாளாரயன்' என்று பெயர் காணப்படுகிறதுபோலும்.

## சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலம் (கி. பி. 1251-1278)

இம்மன்னன் காலத்தில் சிதம்பரத்தில் களப்பாளராயன் என்பவன் இருந்திருக்கிறான். அவன் தில்லை மாகாளிக்குச் சில அறக்கொடைகள் அளித்திருக்கிறான்.[82]

## சடையவர்மன் வீரபாண்டியன் காலம்

சோழபுரத்தைச் சேர்ந்த உத்தமசோழபுரச் சதுர்வேதி மங்கலத்தில் நுழைவாயில் மண்டபம் ஒன்றைக் களப்பாள ராயர் என்பவர் வீரபாண்டியன் காலத்தில் எடுப்பித்திருக்கிறார்.[83]

---

81. A. R. E. 445 of 1912.

82. Journal of Madras University, The Kalabhras in the Pandya country by M. Arunachalam, Page. 59.

83. Ibid.

அம்மண்டபம் உடையார் **களப்பாளராயர் மண்டபம்** என்று அழைக்கப்பட்டது.

### சடையவர்மன் விக்ரமபாண்டியன் காலம்

தென்னாற்காடு மாவட்டம், திருச்சாபுரம் மங்கலபுரீச்வரர் கோயில் கருவறையின் வடக்குப் பக்கச் சுவரில் சடையவர்மன் விக்ரமபாண்டியன் காலத்தில் (கி. பி. 1403) ஒரு கல்வெட்டு எழுதப்பட்டிருக்கிறது.[84] அது நிலக் கொடையைப் பற்றி விளக்கும் கல்வெட்டாகும். அத்தானத்தை அளித்து கையொப்பமிட்டவர்களில் களப்பாளராயன் என்பானும் காணப்படுகிறான். இவன் விக்ரமபாண்டியன் காலத்தில் இருந்த அதிகாரியாவான்.

### விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவாராயன் காலம்

இரு சமய விளக்கம் என்னும் சிறந்த தமிழ்நூல் எழுதிய ஹரிதாசர் களப்பாளரராயர் என்று குறிக்கப்படுகிறார்.[85] இவர் கிருஷ்ணதேவராயர் காலத்தில் இந்நூலை எழுதியுள்ளார்.

---

84. S. I. I. Vol. XVII, No. 130.

85. Journal of Madras University, Kalabhras in the Pandya country by M. Arunachalam, Page. 59.

# களப்பிரர் சமயம்

களப்பிரர்கள் சமண சமயத்தைத்தழுவியவர்கள் என்ற ஒரு கருத்து நிலவிவருகிறது. களப்பிரர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல, அச்சமயத்தைத் தமிழகத்தில் பரப்புவதற்குத் தீவிரமாக ஈடுபட்டவர்கள் என்றும்; அதன் காரணமாகத் தமிழ்நாட்டில் முன்பு வேரூன்றியிருந்த சைவ வைணவ சமயங்களை அழிக்கவும் முயன்றனர் என்றும் சிலர் கருதுகிறார்கள். களப்பிர அரசர் அச்சுதப் பரம்பரையினர் என்று கூறப்படுவதால் அவர்கள் வைணவ சமயத்தார் என்று கருதப்பட்டது. மேலும் களம்பிர அரசர்கள் பௌத்த மதத்துக்கும் சார்பாக இருந்திருக்கின்றனர் என்றும் கூறப் பட்டது. கூற்றுவநாயனார் போன்ற ஒன்றிரண்டு களப்பிர அரசர் சைவ சமயத்தவராகவும் இருந்திருக்கின்றனர் என்று மயிலை சீனி- வேங்கடசாமி கூறுகிறார்.[86] ஆகவே களப்பிரர் எச்சமயத்தைச் சார்ந்தவர் என்பது இன்னமும் அறுதியிட்டுக் கூறமுடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. களப்பிரர்களில் பெரும்பாலோர் எந்த சமயத்தைச் சார்ந்திருந்தனர் என்று ஓரளவுக்குத் திடமாகக் கூறலாம்.

## களப்பிரர் சமண சமயத்தவரா?

களப்பிரர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கூறு வதற்கு நமக்கு எந்தவித ஆதாரங்களும் இதுவரையில் கிடைத்தில.(1) அவர்களது ஆதி இருப்பிடமான மைசூர்மாநிலத் தில் சிரவண பௌகொள பகுதியானது சமண சமயம் தழைத் தோங்கிய பகுதி என்பதனாலும்,(2)அவர்கள் தமிழகத்தில்ஆட்சி செய்த நாளில் தமிழ்நாட்டில் சமண சமயம் செழித்து வளர்ந் திருந்த காரணத்தாலும் களப்பிரர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கருதப்படுகிறது. (3) மேலும் வேள்ளிக்குடிச் செப்பேட்டில் வேள்வி முற்றுவிப்பதற்காகப்பாண்டிய மன்ன ரால் தரப்பட்ட 'வேள்விக்குடி' என்னும் ஊர் களப்பிரர் காலத்

---

86. மயிலை சீனி. வேங்கடசாமி, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், பக்கம் 26

தில் திரும்பப் பெறப்பட்டு விட்டது என்று கூறப்படுவதால் களப்பிரர் சமண சமயத்தவர் என்று கூறப்படுகிறது. மேலே கூறப்பட்டுள்ள மூன்று காரணங்களும் சரியானவைதானா என்பதை ஆராய்வோம்.

1. சிரவணபௌகொளப் பகுதியிலிருந்து களப்பிரர்வந்தது உண்மை. ஆனால் சமண சமயத்தவராகத்தான் வந்திருப்பார்கள் என்று கருதுவதற்கு ஒரு ஆதாரமும் இல்லை. 2. களப்பிரர்கள் தமிழ்நாட்டுக்கு வந்த பின்னர்தான் தமிழ் நாட்டில் சமண சமயம் பரவ ஆரம்பித்தது என்று கூறுவதற்கில்லை. அவர்கள் வருகைக்கு முன்னமேயே தமிழ்நாட்டில் சமண சமயம் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதைத் தமிழ் இலக்கியங்களிலும், பழமையான தமிழிக் கல்வெட்டுக்களிலும் காணலாம்.[87] 3. வேள்வி முற்றுவிப்பதற்காகப் பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனால் தரப்பட்ட வேள்விக்குடி என்னும் ஊரைக் களப்பிரர் திரும்பப் பெற்றுக் கொண்டது சமயக் காழ்ப்பினால்தான் என்பதை ஒப்புக் கொள்ள இயலவில்லை. இதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கலாம் என்று மயிலை சீனி. வேங்கடசாமி கூட கருதியிருக்கிறார்.[88] அவ்வாறே சமயக் காழ்ப்பாக இருந்தாலும் சமண சமயத்தவராக இருந்து தான் செய்திருக்க வேண்டுமென்பதில்லை. பௌத்த சமயத்தவராக இருந்தும் செய்திருக்கலாம் அல்லவா? எதையும் நாம் திட்ட வட்டமாகக் கூறமுடியவில்லை. அதனால் களப்பிரர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்று கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்பதை உணரலாம்.

## களப்பிரர் பௌத்த சமயத்தவரா?

முதன் முதலில் தமிழ்நாட்டுக்கு வந்த களப்பிரர் பௌத்த சமயத்தைச் சார்ந்து இருக்கலாம் என்று கருத இடமேற்படுகிறது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து ஆட்சி புரிந்த அச்சுத விக்கிராந்தன் என்பான் பௌத்த சமயத்தைச் சார்ந்தவனாகத் தெரிவதாலும்

87. Iravatam Mahadevan, Corpus of Tamil Brahmi Inscriptions.

88. களப்பிரர் ஆட்சியில் தமிழகம்,

பௌத்த நூல்கள் அவனது ஆட்சிக் காலத்தில் எழுதுவதற்குப் பலவித உதவிகள் புரிந்திருக்கிறான் என்பதாலும் கொள்ளலாம்.

மேலும் காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்த மதம் சிறப்புற்று விளங்கியிருக்கிறது என்பதற்கு அங்கு நடைபெற்றுள்ள அகழ்வாய்வில் புத்தவிகாரை, புத்தபாதம் போன்ற பௌத்த மதத்தைச் சார்ந்த பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளவையும்; மேலையூரில் கிடைத்துள்ள மைத்ரேயர் உருவமும் இதற்குச் சான்றாக நிற்கின்றன. இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் காவிரிப்பூம் பட்டினத்தில் பௌத்த மதம் பெற்றிருந்த செல்வாக்கினைக் காணலாம்.

கி.மு., கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் காஞ்சிபுரம் பௌத்த மதத்தின் தலைமைப் பீடமாகத் தமிழகத்தில் விளங்கியிருக்கிறது. அங்கிருந்து புத்த பிக்குகள் சிலர் சீனம் முதலிய கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று புத்த மதத்தைப் பரப்பியிருக்கின்றனர். அதேபோன்று காவிரிப்பூம்பட்டினத்துக்கு அண்மையிலுள்ள நாகப்பட்டினத்திலும் புத்த ஸ்தூபா கி. பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முன்னமேயே இருந்திருக்கிறது என்றும் வரலாறு கூறுகிறது.

சாக்கிய நாயனார் புராணத்தின் வாயிலாக, திருவாரூரிலும் பௌத்த மடங்கள் இருந்தன என்பதும், அங்கு பல பௌத்த பிக்குகள் வாழ்ந்தனர் என்பதும் தெரிய வருகின்றன. ஆகவே கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுவரை வாழ்ந்த களப்பிரர் பௌத்தர்களாக இருந்திருக்கலாம் எனக் கருதலாம்.

## கி. பி. 6-ஆம் நூற்றாண்டுக்குப் பின் இருந்த களப்பிரர் வைதீக சமயத்தை வெறுத்தவர்களல்லர்

கி. பி. 6-ஆம் நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந்த களப்பிரர் வைதீக சமயத்தைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் அனைத்தும் அவ்வாறே காட்டுகின்றன. கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்குப்

பிறகும் களப்பிரர்கள் தமிழகத்தின் ஒரு பகுதியின் ஆட்சி செய்திருக்கின்றனர் என்பதைப் பல்லவர் செப்பேடுகளும், சாளுக்கியர் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் காட்டா நிற்கின்றன. அவர்களைப் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கும் முதற் கல்வெட்டு பொன்னிவாடிக் கல்வெட்டாகும். அக்கல்வெட்டு கோக்கண்டன் இரவியின் அடியாள் மணியன் சேகரி என்பான் பொன்னிவாடி செங்கண்டர்க்கு (சிவனுக்கு) உண்ணாழிகைப் புறமாக நிலம் தானம் அளித்ததைக் குறிக்கிறது. கோக்கண்டன் இரவியின் அடியாள் என வருவதால் கோக்கண்டன் இரவியினுடைய பணியாளர்களில் ஒருவனாகக் கொள்ளலாம். அவன் சிவன் கோயிலுக்குக் கொடை அளித்திருப்பதால் கோக்கண்டன் இரவி சைவ மதத்தையும் ஆதரித்திருக்கிறான் என்று நாம் உணரலாம்.

இவனுடைய காலத்திய மற்றொரு கல்வெட்டில் வெளிலூர்த் தென்னூர் நக்கனார் மண்டபத்துக்கு ஓமயிந்திரன் மாகலூர்க் கிழான் கண்ணன் காவன் என்பான் ஒரு கற்றூண் அளித்த செய்தி குறிக்கப்படுகிறது. வெளிலூர்த் தென்னூர் நக்கனார் கோயிலும் சிவன் கோயிலேயாகும். ஆகவே கோக்கண்டன் இரவி சைவ மதத்தைச் சிறப்புறவே வளர்த்திருக்கிறான் என்று நாம் கருதலாம். ஆதலால் பிற்காலத்தியக் களப்பிர மன்னர்கள் சைவ சமயத்தை ஆதரித்து வந்திருக்கின்றனர் என்று திடமாகக் கூறலாம்.

# களப்பிரர் காசு

கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் ஓரளவுக்குச் செல்வாக்கோடு இருந்த களப்பிரர் தங்கள் காசுகளை வெளியிட்டிருப்பார்கள் என்று வரலாற்றாசிரியர்கள் எண்ணுவது இயற்கையே.

சில ஆண்டுகளுக்கு முன்பு காசுகளைப் பற்றி ஆய்வு செய்யும் திரு. எஸ். இராமையா என்பவர், காவிப்பூம்பட்டினத்தில் களப்பிரர் காசு ஒன்றை அங்குள்ள மீனவரிடமிருந்து விலைக்கு வாங்கியதாகவும், அதன் முன்புறம் புத்த சைத்யமும், வேலிக்குள் இருக்கும் மரமும் காணப்படுவதாகவும், பின்புறம் கி. பி. 3-4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி எழுத்தில் 'களப்ர' என்று எழுதப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டு எழுதியிருந்தார்.[87] அக்காசின் படம் அக்கட்டுரையோடு வெளியிடப்படாததால் அதைப் பற்றி நாம் ஒன்றும் கூறமுடியாத நிலையில் உள்ளோம்.

தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவில், பெரும்பாலான பகுதிகளில், முன்பக்கம் 'வீரகேரளஸ்ய' என்று தேவ நாகரி எழுத்திலும் பின் பக்கம் 'கண்டராங்குஸஸ்ய' என்று தேவ நாகரி எழுத்திலும் எழுதப்பெற்றுள்ள காசுகள் கிடைத்திருக்கின்றன. இவ்வகையான காசுகள் அண்மையில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கடப்பாக்கம் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இக்காசுகள் யார் காலத்தில் வெளியிடப்பட்டன என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. பெரும்பாலான அறிஞர்கள் முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் வாழ்ந்த வீரகேரளன் என்னும் சேர அரசன் வெளியிட்டிருக்கவேண்டும் என்று கருதுகின்றனர். காசுகளைப்பற்றி ஆய்வு செய்துவரும் திரு லக்ஷ்மி நாராயணராவ் என்பவரும் இக் காசுகள் கி. பி. 1127இல் ஆட்சிக்கு வந்த வீரகேரளன் தான் வெளியிட்டிருக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

87. S. Ramaiyya, First Kalabra coin, Mail. 1976

ஆனால் அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மதுரைக்கு அருகில் படியெடுத்துள்ள ஒரு கல்வெட்டில் முதலாம் இராஜராஜன் காலத்திலேயே ஒரு வீரகேரளன் குறிக்கப்படுகிறான். ஆகவே எந்த வீரகேரளன் இக்காசுகளை வெளியிட்டான் என்பது இன்னமும் ஐயப் பாடாகவே உள்ளது.

அத்தோடு கொங்குப் பகுதியில் ஆட்சிபுரிந்த சில மன்னர்கள் கண்டன் என்ற பெயரோடு விளங்கியிருக்கி றார்கள். உதாரணமாகக் கண்டன், கண்டன் வீரநாராயணன், கண்டன் ரவி, ரவிகண்டன் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். 'கண்டராங்குஸஸ்ய' என்று இக்காசுகளில் காணப்படுவதால் அவர்களில் யாராவது இக்காசுகளை வெளியிட்டிருக்கலாம் என்று டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் கருதுகிறார்கள். மேலும் கண்டராங்குஸஸ்ய என்பதற்கு 'கண்டர் என்பவன் அங்குசத்தைப் போன்றவன்' என்று விளக்கம் அளித்துள் ளார்கள். ஆதலால் இவைகளைக் களப்பிரர் குலத்தைச் சேர்ந்த கொங்குச் சேர மன்னர் வெளியிட்டிருக்கலாம் என்று கூறியுள்ளார்கள்.[88] அவர்கள் கூற்று பொருத்தமாக உள்ளது.

88. Dr. R. Nagaswamy, Tamil Coinage, Page. 15-16

# களப்பிரர் பற்றிய வாழ்த்துப் பாக்கள்

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

*தரவு*

*கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்*
*கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய*
*அழலவிர் சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்*
*தாரொடு முடிபிதிர்த்த தமனியப் பொடிபொங்க*
*வார்புனல் இழிகுருதி அகலிடம் உடனனைப்பக்*
*கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்!*

*தாழிசை*

*முரைசதிர் வியன்மதுரை முழுவதூஉம் தலைபணிப்பப்*
*புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்*
*அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்*
*பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ?*
*கலியொலி வியனுலகம் கலந்துட னனிநடுங்க*
*வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு*
*மாணாதார் உடம்போடு மறம்பிதிர வெதிர்மலைந்து*
*சேணுயர் இருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ?*
*படுமணி இனநிரை பரந்துடன் இரிந்தோடக்*
*கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு*
*வெரிநொடு மருப்பொசிய வீழ்த்துதிறம் வேறாக*
*எருமலி பெருந்தொழுவின் இறுத்ததுநின் னிகலாமோ?*

**அம்போதரங்கம்**

*பேரெண்*

*இலங்கொளி மரகதம் எழில்மிகு வியன்கடல்*
*வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்*
*விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்*
*பொருகளி றட்டோய்! புரையு நின்னுடை*

*சிற்றெண்*

*கண்கவர் கதிர்முடி கனலும் சென்னியை*
*தண்சுடர் உறுபகை தவிர்த்த ஆழியை*
*ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை*
*வலிமிகு சகடம் மாற்றிய அடியினை*

இடையெண்

போரவுணர்க் கடந்தோய் நீ
புணர் மருதம் பிளந்தோய் நீ
நீரகலம் அளந்தோய் நீ
நிழல்திகழும் படையோய் நீ

அளவெண்

ஊழி நீ உலகு நீ உருவு நீ அருவு நீ
ஆழி நீ அருளு நீ அறமு நீ மறமு நீ.

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழில் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
தொன்று முதிர்கட லுலகம் முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு

அலைகடற் கதிர்முத்தம் அணிவயிரம் அவையணிந்து
மலையுறைமா சுமந்தேந்தும் மணியணைமேல் மகிழ்வெய்தி
ஓசனைசூழ் திருநகருள் உலகொருமூன் றுடனேத்த
ஈசனையாய் இனிதமர்ந்தங் கிருடிகட்கும் இறையவர்க்கும்
அருளறமே அறமாக அயலார்கண் மயலாக
இருளறநன் கெடுத்தியம்பி இருவினை கடிந்திசினோய்!

தாழிசை

துன்னாத வினைப்பகையைத் துணிசெய்யும் துணிவினையாய்
இன்னாத பகைமுனைபோல் எரித்தடக்கும் நினைப்பினால்
இருளில்லா உணர்வென்னும் இலங்கொளியால் எரித்தனையாய்
அருளெல்லாம் அடைந்தெங்கண் அருளுவதுன் அருளாமோ?

மதிபுரைமுக் குடைநீழல் மகிழ்வெய்தி அடைந்தோரைக்
கதிபொருதக் கருவரைமேல் கதிர்பொருத முகம்வைத்துக்

கொன்முனைபோல் வினைநீங்கக் குளிர்நிழற்கண் மகிழ்ந் தனிர்போல்
நின்மினீர் எனவுணர்த்தல் நிருமல நின் பெருமையோ?
மனைதுறந்து வனம்புகுமின் மலமறுக்கல் உறுவீரேல்
வினையறுக்கல் உறுவார்க்கு விழுச்செல்வம் பழுதென் றீங்
கலகில்லாப் பெருஞ்செல்வத் தமரரசர் புடைசூழ
உலகெல்லாம் உடன்றுறவா உடைமையுநின் உயர்வாமோ

அராகம்

அரசரும் அமரரும் அடிநிழல் அமர்தர
முரசதிர் இமிழிசை முரணிய மொழியினை

பேரெண்

அணிகிளர் அவிர்மதி அழகெழில் அவிர்சுடர்
மணியொளி மலமறு கனலி நின்னிறம்
மழையது மலியொலி மலிகடல் அலையொலி
முழையுறை அரியது முழக்கம் நின்மொழி

இடையெண்

வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை
சொலற்கரு மெய்ப்பொருள் முழுவதும் சொல்லினை
அருவினை வெல்பவர்க் கரும்புணை ஆயினை
ஒருவினை ஆகி உலகுடன் உணர்ந்தனை

சிற்றெண்

உலகுடன் உணர்ந்தனை
உயிர்முழு தோம்பினை
நிலவுறழ் நிலத்தனை
நிழலியல் ஆக்கையை
மாதவர் தாதையை
மலர்மிசை மகிழ்ந்தனை
போதிவர் பிண்டியை
புலவருட் புலவனை

தனிச்சொல்

என வாங்கு

சுரிதகம்

அருளுடை ஒருவ! நிற் பரவுதும் எங்கோ
இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை
ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த

நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி
ஒற்றைச் செங்கோல் ஓச்சிக்
கொற்ற வெண்குடை நிழற்றுக எனவே

## அம்போதரங்க ஒரு போகு

### தாழிசை

கரைபொருநீர்க் கடல்கலங்கக் கருவரைமத் ததுவாகத்
திரைபொருது புடைபெயரத் திண்டோளாற் கடைந்தனையே
முகில்பொரு துடல்கலங்க முழவுத்தோள் புடைபெயர
அகல்விசும்பின் அமரர்க்கும் ஆரமுதல் படைத்தனையே
வரைபெரிய மத்தாக வாளரவம் கயிறாகத்
திரையிரியக் கடல்கடைந்து திருமகளைப் படைத்தனையே

### அராகம்
### பேரெண்

அமரரை அமரிடை அமருல கதுவிட
நுமரது புகழ்மிக மிகவிகல் அடுத்தனை
அலைகடல் உலகமும் அந்தணர்க் கீந்தனை
உலகொடு நிலவிய ஒருபுகழ் சுமந்தனை

### இடையெண்

ஆதிக்கண் அரசெய்தினை
நீதிக்கண் மதிநிரம்பினை
விளங்கெரி முதல்வேட்டனை
துளங்கெரியவர் புகழ்துளக்கினை

### அளவெண்

அலகுநீ உலகுநீ அருளுநீ பொருளுநீ
நிலவுநீ வெயிலுநீ நிழலுநீ நீருநீ

தனிச்சொல் என வாங்கு

### சுரிதகம்

பவழம் எறிதிரைப் பரதைக் கோவே!
புகழ்துறை நிறைந்த பொருவேல் நந்தி!
உலகுடன் அளந்தனை நீயே,
உலகொடு நிலவுமதி உதயவரை ஒத்தே

## வண்ணக ஒரு போகு

அராகம்

அகலிடமும் அமருலகும் அமர்பொருதும் அறந்தோற்றுப்
புகலிடநின் குடைநிழலாப் புகுமரணம் பிறிதின்றி
மறந்தோற்று நிறங்கருகி மாற்புகழும் நிறைதளரப்
புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருதகளம் வெறிதாக
மண்ணுலகும் மறிகடலும் மாமலையும் நிலைகலங்க
விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்துள் அலைத்தனையே
அதனால்,
கனைகடல் உடைதிரை கரைபொரக் கடைந்தனை
முனைவரும் அமரரும் முறைமுறை வந்துநின்
இணைமலர் பலர்புகழ் பயில்வருதார் பண்பினை
மருளுறு துதைகதிர் மணியது
மணிநிற மருளும் நின்குடை
குடையது குளிர்நிழல் அடைகுன
உயிர்களை அளிக்கும் நின்கோல்
கோலது செம்மையிற் குரைகடல் வளாகம்
மாலையும் காலையும் மகிழ்தூங் கின்று

பேரெண்

ஆருயிர்க் கெல்லாம் அமிழ்தின் றமையா
நீரினும் இனிதுநின் அருள்
அருளும் அலைகடலும் ஆயிரண்டும் ஒக்கும்
இருள்கொடிமேற் கொண்டாய் நினக்கு

சிற்றெண்

நீரகலம் காத்தோய் நீ நிலவுலகம் ஈந்தோய் நீ
போரமர் கடந்தோய் நீ புனையெரிமுன் வேட்டோய் நீ
ஒற்றைவெண் குடையோய் நீ கொற்றச்செங் கோலாய் நீ
பாகையந் துறைவனீ பரியவர் இறைவனீ
தனிசசொல் எனவாங்கு

சுரிதகம்

பொருகடல் வளாகம் ஒருகுடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிருநிதி ஈந்து
மனமகிழ்ந்து
அருள்புரி பெரும்புகழ் அச்சுதர் கோவே!

இனையை ஆதலின் பனிமதி தவழும்
நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுதல் நாவலர்க் கரிதே

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

*தரவு*

நலங்கிளர் திருமணியும் நன்பொன்னும் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமான் எருத்தஞ்சேர் அணையின்மேல்
இருபுடையும் இயக்கரசர் இணைக்கவரி எடுத்தெறிய
விரிதாமம் துயரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டாற்ற நாற்காதம் வகைமாண உயர்ந்தோங்கும்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே

*தாழிசை*

ஒல்லாத பிறப்புணர்த்தும் ஒளிவட்டம் புடைசூழ
எல்லார்க்கும் எதிர்முகமாய் இன்பஞ்சேர் திருமுகமோ
ஏர்மலர மணிப்பொய்கை எழிலாம்பற் பொதியவிழ
ஊர்கோளோ டுடன்முளைத்த ஒளிர்வட்டம் உடைத்தன்றே!

கனல்வயிரம் குறடாகக் கனற்பைம்பொன் சூட்டாக
இனமணி ஆரமா இயன்றிருள் இரிந்தோட
அந்தரத் துருளுநின் அலர்கதிர் அறவாழி
இந்திரர்கள் இனிதேத்த இருவிசும்பிற் றிகழ்ந்தன்றே!

வாடாத மணமாலை வானவர்கள் உள்ளிட்டார்
நீடாது தொழுதேத்த நிற்சேர்ந்த பெருங்கண்ணு
முகிழ்பருதி முகநோக்கி முறுவலித் துண்ணெகிழ்ந்து
திகழ்தகைய கோட்டைசூழ் திருநதிகள் திளைத்தன்றே?

*அம்போதரங்கம்*

*பேரெண்*

மல்லல் வையம் அடிதொழு தேத்த
அல்லல் நீக்கற் கறப்புனை ஆயினை
ஒருதுணி வழிய உயிர்க்காண் ஆகி
இருதுணி ஒருபொருட் கியல்வகை கூறினை

இடையெண்

ஏடலர் தாமரை ஏந்தும் நின்னடி
வீடொடு கட்டினை விளக்கும் நின்மொழி
விருப்புறு தமனிய விளக்கு நின்னிறம்
ஒருக்குல கூடுற உஞற்றும் நின்புகழ்

சிற்றெண்

இந்திரர்க்கும் இந்திரன்நீ இணையில்லா இருக்கையைநீ
மந்திர மொழியினைநீ மாதவர்க்கு முதல்வனும்நீ
அருமை சால் அறத்தினைநீ ஆருயிரும் அளித்தனைநீ
பெருமைசால் குணத்தினைநீ பிறர்க்கறியாத் திறத்தினைநீ

தனிச்சொல்

என வாங்கு

சுரிதகம்

அருள்நெறி ஒருவ! நிற் பரவுதல் எங்கோத்
திருமிகு சிறப்பிற் பெருவரை அகலத்
தென்மிகு தானைப் பண்ணமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் **விண்ணவன்**
செபிமனை செறுக்கறத் தொலைச்சி
ஒருதனி வெண்குடை ஓங்குக எனவே.[89]

89. இப்பாடல்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோள் காட்டப் பட்டுள்ளன

# கொங்கு நாட்டுத் தனிப்பாடல்

சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களையும் அச்சுதக் களப்பாளன் வென்று அவர்களைத் தளையிலிட்டு வைத்திருந்தபோது தங்களது தளையை விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் பாடியதாகக் காணப்படும் சில வெண் பாக்கள் யாப்பருங்கல விருத்தி உரையில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. அந்நிகழ்ச்சியை உறுதிப்படுத்தும் வண்ணம் பெரியார் மாவட்டம் கொடுமணலில் அண்மையில் கிடைத்த ஓலைச்சுவடியில் ஒரு தனிப்பாடல் காணப்படு கிறது.

இத்தனிப்பாடலில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களை வென்ற அச்சுதக் களப்பாளனைத் தென்கரை நாட்டுக் களத் தூரைச் சேர்ந்த பூசகுலநல்லவன் என்பவன் வென்றதால் அவனுக்கு ஆதொண்டைமான் என்ற மன்னன் கொங்குநாட் டில் 24 நாடுகளையும் ஆதொண்டை நாட்டில் 24 கோட்டங் களையும் பரிசாக அளித்துப் பட்டங்கள் பல வழங்கியமை குறிக்கப்படுகிறது.

இங்கு குறிக்கப்படும் ஆதொண்டமான். என்பவன் பல்லவ மன்னனாக இருக்கலாம்.[90]

எழுத்தமைதியைக் கொண்டு பார்க்கையில் இந்த ஓலைச் சுவடியின் காலம் கி. பி. 18-ஆம் நூற்றுண்டின் இறுதி எனக் கூறலாம்

90. இச்சுவடியை ஈரோடு புலவர் செ. இராசு எம்மிடம் காண்பித்து உதவினார்.

## கொங்கு நாட்டுத் தனிப்பாடல்

### மூலனூர் தொண்டமானுக்குப் பட்டம் சூட்டியது

*பார்மீதில் வருகின்ற பரிதாபி வருஷத்தில்*
*பங்குனிமூன் றாந்தியதியில்*
*பாண்டியன் சேரனுடன் சோழரை* **அச் சுதக்களப்**
**பாளன்**சிறை யில்வைத்துமே
ஆராய்ந்து வருகின்ற போர்மன்ன ரவர்வெல்வாய்
ஆதொண்ட மானழைத்து
அன்புபெறு மூவெட்டு நாடுனக் கெய்தவே
ஆதொண்ட மண்டலத்தில்
தீராத இருப்பது நாலுகோட் டமுமளித்துத்
தென்திசைக் கேகுநாளில்
திறமான பூசகுல நல்லவ னெந்நாளும்
செம்பொனால் செய்தமுடியால்
தோராத வெற்றிபுனை ஆதொண்ட மான்வந்து
தொண்டைமான் நீயென்றுதான்
சூழுலகில் இருபத்து நாலுநா டுங்கண்டனது
தொண்டமாப்பட்டம் சூட்டினாரே!

*காராளர் குலதிலக ராசபர மேசுரன்*
*காளத்தி மலைக்காவலன்*
காவேரி வாசகன் வாழரச மணவாளன்
*களத்தூரில் பூசகுலனே*
*பாராளர் மூவர்சபை* **அச்சுதன் தன்னினால்**
*பார்வேந்தர் முடிகள் சூட்ட*
*பனிரண்டு பட்டமுள அன்றுகத் தொண்டைமான்*
*பலவரிசை பாரில்நல்கி*
*வாராளர் வருகடல் தொண்டைமண் டலங்கொங்கு*
*வாளையார் ரிஷபகிரியும்*
வையாறு வடகிழக்கு துகள்செய் யாறுதெற்கு
வடதிசைத் திருவேங்கடம்

சீராளர் நல்லவன் செம்பமுனை மெச்சியே
சேருமா மதுக்கரைக்கு
தென்திசைத் தொண்டைமான் அண்டநா டும்புரக்க
செயபன்றி யுள்ளளவுமே!

முன்னமொரு காவலில் சிறைவிடுக ராயர்புர
மூதூரில் வருராயர்முன்
முன்பாக வேபகுதி செல்வழிச் செலுத்திநீ
முனைபெற்ற ராயர்புதல்வன்
தன்னுடைய கைக்கிடாய்ச் செவிதனை அறுத்து
நவியினில் சங்கிலியுடன்
சவுரியத்துடனே யறுத்துநால் விடுத்தவன் யிவர்மகா
தாட்டீகன் எனமகிழ்ந்து
அன்னகரில் வருராயர் பலவரிசை நல்கியே
அருள்மூல னூர்விளங்க
அச்சுதத் தொண்டைமான் செம்பமுனைத்
தொண்டைமான்
நல்லதம் பித்தொண்டைமான்
மன்னர்சிறை விடுகுரா சத்தொண்டை மான்அருள்
மாந்தியப் பத்தொண்டைமான்
மைந்தனான வருசோழி யப்பத் தொண்டைமான்
மதுராதென் கரைநாடனே!

★